# வடக்கும் தெற்கும்

THE MADURA TAMIL SANGAM

வேலூர்
க. ப. சந்தோஷம், பி. ஏ., எல். டி.,
எழுதியது.

சென்னை-சூளை,
ஸ்ரீ பாரதி அச்சுக்கூடத்திற்
பதிப்பிக்கப்பெற்றது.
அக்டோபர் – 1938

# முகவுரை

மேற்கு, கிழக்கு என்ற தமிழ்த்திசைப் பெயர்கள் முறையே உயர்வு, தாழ்வு என்ற பொருளுடைய, 'மேல்', 'கீழ்' என்ற முதனிலைகளிலிருந்து தோன்றுகின்றன வென்பதை, கால்டுவேல் எனும் அறிஞர் சென்ற நூற்றாண்டில் எடுத்துக்காட்டினர். வடக்கு, தெற்கு என்ற திசைப்பெயர்களுக்கும் இதுபோன்ற காரணமுளதோ வென்று ஆராயத் தொடங்கி, இவ்விரு சொற்களையும் பற்றிய பல குறிப்புக்களைத் தொகுக்கலானேன். முதலில் தமிழ் நூல்களில் இவைபற்றிவருங் கூற்றுக்களை உற்றுநோக்கிப் பிறகு தமிழ்நாட்டாரிடையே வடக்குந் தெற்கும் பற்றி நிகழும் வழக்கங்களைத் திரட்டிப்பார்த்தேன். இவற்றால் யான்கொண்ட கருத்து நிறைவேறவில்லையாயினும், மேற்குங் கிழக்கும் போலவே, வடக்குந் தெற்கும் முறையே உயர்வு தாழ்வுகளைக் காட்டுமென்பது வெளியாயிற்று. ஆதலின், வடக்கு, தெற்கு என்ற சொற்களின் அடிப்பொருள் யாதென வினவுவதை நிறுத்தி, இவ்விரண்டு திசைகளையும் பற்றி யான் தொகுத்த கருத்துக்கள் மட்டும் பிறர்க்கும் பயன் படக் கூடுமென்று கருதி இச் சிறுநூலை வெளியிடுகின்றேன்.

இதில் வடக்கி னுயர்வுந் தெற்கின் தாழ்வுமே கூறப்படுதலின், இக்கருத்திற்கு முரண்படுந் தெற்கின் சிறப்பைக் குறித்த சில செய்திகளைக் கூறாது விடுத்தேன். புதிய துறையிற் செல்லும் இவ்வாராய்ச்சியிற் பிழையுளதேல் தமிழுலகம் பொருத்தருளுமாறு இறைஞ்சுகிறேன்.

க. ப. சந்தோஷம்.


## பிழை திருத்தம்

17-ஆம் பக்கத்தின் 2-ஆம் அடிக்குறிப்பில் 'நச்சினார்க்கினியர் செய்த உரையானும்,' என்ற பகுதியைப் 'புறநானூற்றின் பழைய வுரையானும்' எனத் திருத்திப் படிக்க.

# உள்ளுறை


| எண் | | பக்கம் |
|---|---|---|
| க. | முன்னுரை | 1 |
| உ. | வடக்கினுயர்வுந் தெற்கினிழிவும் | 10 |
| ங. | ,, ,, (தொடர்ச்சி) | 19 |
| ச. | வடக்கையுந் தெற்கையும்பற்றி வந்த வழக்கங்கள் | 27 |
| ரு. | வடக்குந் தெற்கும் முறையே மேற்குங் கிழக்குமாதல் | 34 |
| சு. | வையகத்தின் வடபாதியுந் தென்பாதியும் | 41 |
| எ. | தெற்கே கூம்பி வடக்கே விரியும் வையகம் | 51 |
| அ. | உத்தராயணம் தட்சிணாயனம் | 67 |

# எண்டிசைக் காவலர்




வடக்கு = குபேரன்

தெற்கு = இயமன்

# வடக்கும் தெற்கும்

## க. முன்னுரை

கயல்விழிக் காரிகையாகிய **மலைமகளை விரி சடைக் கடவுள்** மணந்த ஞான்று, மாட்சிமிக்க அத்திருக்கோலத்தைக் கண்ணுறும்வண்ணம் தேவரும், பிறரும் ஒருங்கே திரண்டு கைலையங் கிரியில் கூடுவாராயினர். உலகெலாம் உணர்ந் தோதற்கரிய முதல்வன் உமையவளைக் கடி மணம் செய்வதை மூவுலகும் காண விழைந்த தும் வியப்பாங்கொல்! யாவரும் ஒன்றுகூடிக் கைலாயத்தை யடைந்ததன் பயனாக, வடதிசை தாழ்ந்து தென்றிசை யுயர்ந்தது. எழுதரிய எழில்வாய்ந்த இனிய பார்வதியை, முத்து மூரல் முகிழ்த்து முப்புர மெரித்த முக்கட் கடவுள் மணக்குங் காட்சியைப் பார்த்துக் கழிபே ருவகை எய்தவெண்ணி வந்தவரெல்லாம், வட திசை தாழ்ந்து தென்றிசை யுயர்ந்த பெரு நிகழ்ச்சி கண்டு மெய்விதிர்த்தனர். துலாக் கோல் சாயுமாறு வையகம் நிலைகுலைந்தது. அதுகண்டு அஞ்சிய எல்லோரும் பிறைசூடும் பெருமானை வணங்கி, 'இத்துன்பம் நீக்கும் பொறுப்பு நினதே' என்றிறைஞ்சினர். அன்

புருவாகிய அக்கையிலயாளி, பெருமை சான்ற **அகத்திய**ரை யழைத்து, 'நீ தென்றிசை சென்று, நிலைதடுமாறிய பாரினை முன்போற் சமநிலைக் குக் கொணர்வாயாக,' என்று பணித்தார்; அவ்வாணையைச் சிரமேற்கொண்ட குறுமுனி தென்றிசை நோக்கிப் புறப்பட்டு வழியில் குறுக்கே தடுத்துயர்ந்த **விந்திய**த்தை யடக்கித் தென்னடுபோந்து முன்போல் உலகை நிலை பெறச் செய்தனரென்பது புராணத்துட் கண்டது.

இப்புராணக்கூற்றைப் பகுத்துப்பார்த்து அதன் உட்கிடை யாதென வினவுவது நமது நோக்கமன்று. உட்கிடை யாதாயினுமாக. உலகின் ஒரு திசை தாழ்ந்தும் மற்றொரு திசை உயர்ந்துமிருத்தல் கூடுமோ என்ற கேள்வியை வடக்கு, தெற்கு என்ற திசைகளில் வைத்து ஆராய்வதே இக்கட்டுரையின் நோக்கம்; ஆதலால், கைலையங்கிரியில் யாவரும் ஒன்றுகூடிய தன் விளைவாக, வடதிசை தாழ்ந்தது, தென்றிசை யுயர்ந்தது என்ற கதை நமக்கு ஏற் புடையதொரு தோற்றுவாயாயிற்று. வடபால் தாழ்ந்தது, தென்பாலுயர்ந்தது என்பதுபற்றி நாம் ஐயுறுதல் கூடும்; மேற்றிசை யுயர்ந்தும் கீழ்த்திசை தாழ்ந்து மிருப்பதைப்பற்றி எட் டுணையும் ஐயுறற்கிடமில்லை. இதை முதலில்

எடுத்துக் காட்டிப் பிறகு வடக்கையுந் தெற்கையும் பார்ப்போம்.

மேற்குயர்ந்தது கிழக்குத் தாழ்ந்தது என்ற உண்மையை இருவகையிற் காணலாம்:—

மேற்கு, கிழக்கு என்றசொற்கள் முறையே மேல், கீழ் என்ற பகுதிகளிலிருந்து தோன்றியவை. இதை முதன்முதல் **திராவிட மொழிகளின் ஒப்பிலக்கணம்**[1] என்று பெயர்பெறும் தம் நூலில் **கால்டுவெல்** எனும் அறிஞர் **விளக்கினர்**. மேல், கீழ் என்ற தமிழ்ச்சொற்கள் உயர்வு, தாழ்வு என்ற பொருளுடையனவா யிருக்க, அவை திசைகளுக்குப் பெயரா யமைந்தமை யாங்ஙனம்? தமிழ்நாட்டுத் தொன்மக்கள் தமது நிலத்திலுள்ள மலை, ஆறு, கடல் முதலியவற்றை உற்றுநோக்கியபொழுது ஓருண்மை கண்டனர். பாலாறு, தென்பெண்ணை, காவிரி, வையை, தாமிரவர்ணி முதலிய ஆறுகளெல்லாம் ஒரே திசையில் தோன்றி, அதற்கெதிர் நோக்கி யோடுகின்றன. நீரோட்டத்தைக் கொண்டு நிலத்தின் உயர்வுதாழ்வுகளைத் தெளிதல் கூடுமாதலின், தமிழ்நாட்டிலுள்ள ஆறுகள் தோன்றுந் திசைக்கு மேல்திசை அல்லது மேற்கு என்றும், ஆறுகள் கடல்நோக்கி

1. Comparative Grammar of the Dravidian Languages (Second Edition-Page 24.)

யோடுந்திசைக்குக் கீழ்த்திசை அல்லது கிழக்கு என்றும் பெயரிட்டனர். ஆகவே, மேற்கு, கிழக்கு என்ற பெயர்கள் நிலத்தின் ஏற்றத் தாழ்ச்சிகளாற் பிறந்தவையே.

> "செருநரைக் காணிற் சுமக்க, இறுவரை
> காணிற் கிழக்காந் தலை"

என்ற குறளிற் கிழக்கு என்ற சொல்லிற்குக் கீழ் என்ற பொருள் தோன்றுவது காண்க.

> "அரும்பற மலர்ந்த கருங்கால் வேங்கை
> மேக்கெழு பெருஞ்சினை யிருந்த தோகை"
>
> —குறுந்தொகை

இதில் 'மேக்கெழு பெருஞ்சினை' என்ற சொற்றொடர், 'மேலே வளர்ந்த பெரிய கிளை' என்று பொருள்படுவதால், 'மேற்கு' என்ற சொல்லை யொத்த "மேக்கு" என்பதும் உயர்வைக் குறிக்குமென்பது வெளிப்படுகின்றது. ஈண்டுக் கூறியதெல்லாம் தமிழ் நாட்டிற்குப் பொருந்தும். தமிழ்நாடென்பது, வடக்கே வேங்கட மலையிலிருந்து தெற்கே குமரி வரையிலும்; கிழக்கே வங்காளக்குடாக் கடலிலிருந்து மேற்கே அரபிக்கடல் வரையிலும் பரவியிருக்கும் நிலப்பகுதியா மென்பது பழைய தமிழ் நூல்களில் நாம் காணும் ஓர் உண்மை. இங்ஙனமாயின், இப்பொழுது கேரள மென்றும், மலையாள மென்றும் பெயர்பெறும் நிலப் பகுதிக

ளெல்லாம் தமிழ்நாட்டில் அடங்கவேண்டும். இப்பகுதிகள் முன் தமிழ் வழங்கிய நாடாகவே யிருந்தன. சேரவரசர்கள் ஆண்டுவந்த பகுதியே இந்நாளில் மலையாள மென்றுங் கேரள மென்றுங் கூறப்படுகின்றது. மலையாள மக்கள் தமிழ்நாட்டிலிருந்து சென்றவரே என்பதற்குச் சான்றுண்டு. மலையாள நாட்டில் மேற்கு கிழக்கு என்ற திசைப் பெயர்கள் பொருந்துமாறில்லை. ஏனெனில், அங்கே கிழக்கிலிருப்பது **மேற்குத் தொடர்ச்சி மலைகள்;** மேற்கேயிருப்பது **அரபிக்கடல்.** கிழக்கே மலை வரம்பாயமைந்திருப்பதால், அத்திசையை அங்குள்ளோர் மேற்கென்றே சொல்லவேண்டிய நிலைமை ஏற்பட்டது. ஆனால் மலையாள மொழியில் அது கிழக்கென்றே சொல்லப்படுவதால், செந்தமிழ் நாட்டில் மேற்கு, கிழக்கு என்ற திசைப் பெயர்கள் நன்கு நிலைபெற்றபின், ஒரு சாரார் மலையாள நாட்டிற் புகுந்து, பழைய திசைப் பெயராகிய கிழக்கென்ற பெயரைத் தமது புது நாட்டிலும் வழங்கினரென்று நாம் யூகிக்கவேண்டும். இதுபற்றிய ஆராய்ச்சியை மேற்குறித்த "திராவிட மொழிகளின் ஒப்பிலக்கணம்" என்னும் நூலிற் பார்க்கலாம்.

மேற்கு, கிழக்கு என்ற திசைப்பெயர்கள் தமிழ்நாட்டிற்குப் பொருந்துமாறு பிற நாடுக

ளுக்கும் பொருந்துமோவென்று காண்போம். தமிழ்நாட்டிற்கு வடக்கேயுள்ள பலதேசங்களை யுற்றுநோக்குவோமாயின், அங்குங் கங்கை, மகாநதி, கோதாவரி, கிருஷ்ணை முதலியவை எல்லாம் மேற்கண்டாங்கு மேற்கே தொடங்கிக் கிழக்காகவே பாய்கின்றன. பிரம்மபுத்ர நதி யும் பெரும்பாலும் இப்படியே ஓடுகின்றது. ஆதலின், இந்துதேசம் முழுவதும் தமிழ்நாட்டி லிருப்பதுபோலவே கதிரவன் சாயுந்திசை யுயர்ந்தும், அவனெழும் திசை தாழ்ந்து மிருக் கின்றன என்பதுண்மை. சீனதேசத்திலு மிவ் வாறே யிருக்கக் காண்கிறோம். மேல்ஆசியாவி லுள்ள யூப்ரட்டீஸ்[1] டைகிரிஸ்[2] என்ற இரு பெரு நதிகளும் கிழக்கு முகமாகவே செல்கின் றன. ஆப்பிரிக்காவிலும், ஐரோப்பாவிலு முள்ள ஆறுகளிற் சிலவற்றின் போக்கும் இப் படியேயுள்ளது. வடவமெரிக்கா, தென்னமெ ரிக்காவாகிய இருநிலப் பகுதிகளிலும் மிக மிக நீண்ட மலைத்தொடரொன்று மேற்குக் கடற் கரையை யடுத்துச் செல்வதால், ஆறுகள் பெரும்பாலும் மேற்கிலிருந்து கிழக்கேயே யோடுகின்றன. இம்மலைத் தொடர் வடவமெ ரிக்காவில் **இராக்கீஸ்**[3] என்றும், தென்னமெரிக் காவில் **ஆண்டீஸ்**[4] என்றும் பெயர் பெறுகின்

---

1. Euphrates 2. Tigris 3. The Rockies 4. The Andes

றது. ஆகவே, மேற்றிசை யுயர்ந்தது, கீழ்த்திசை தாழ்ந்ததென்பது ஒருவகையில் ஈண்டுக் காட்டப்பட்டது.

இனி, மற்றொருவகையில் மேற்றிசை யுயர்ந்திருப்பதை நோக்குவோம். ஏறக்குறைய மூவாயிரம் ஆண்டுகட்குமுன், மேல்நாடுகளென்று சொல்லப்படுகின்ற ஐரோப்பிய தேயங்களிலும், அமெரிக்காவிலும், நாகரிகம், செல்வம், அரசியல் முதலியவற்றிற் சிறந்து விளங்கிய நாடொன்றுமிருந்ததில்லை. அக்காலத்திலும், அதற்குப் பல நூற்றாண்டுகள் முன்னுங் கீழ்நாடுகளெனப் பெயர்பெறுகின்ற **எகிப்து**[1] **பாபிலன்**[2] **இந்தியா**[3] **பாலஸ்தீன்**[4] **பர்ஸிகம்**[5] **சீனு**[6] முதலியனவே எல்லாத் துறைகளிலும் ஓங்கி நின்றன. ஈண்டுக் கூறிய நாடுகளைத் தொன்மைபற்றியாவது மேன்மை குறித்தாவது வரிசைப்படுத்திக் கூறவில்லை என்பதை மனத்திற்கொள்க. மிகப் பழைய நாகரிகங்களெல்லாம் இந்நாடுகளிற்றான் தோன்றின. காலஞ்செல்லச்செல்ல, ஆற்றலும் அரசுஞ்செல்வமும் கிழக்கிலிருந்து மேற்கேசெல்லத் தலைப்பட்டன. செல்லுங்கால், முதலில் ஐரோப்பாவின் கிழக்கு மூலையிலுள்ள **கிரேக்க**[7] தேயத்தை

1. Egypt 2. Babylon 3. India 4. Palestine 5. Persia 6. China 7. Greece

இவை அடைந்தன. பிறகு சற்று மேற்கிலுள்ள **இத்தாலி**[1] என்றிப்பொழுது அழைக்கப்படுகின்ற உரோம நாட்டில் இவை போய்நின்றன. பின் அங்கிருந்து **இஸ்பானியா**[2] **பிரான்சு**[3] **இங்கிலாந்து**[4] ஆகிய நாடுகளிற் பரவி **அமெரிக்கக் கூட்டு மாநாடுகள்**[5] என்கின்ற மேற்றிசையின் முடிவிலுள்ள நாட்டை எட்டின. இதை யுற்றுநோக்குங்கால் ஆட்சியும் ஆற்றலும் ஆறுகளைப் போல் மேற்கிலிருந்து கிழக்கே செல்லாமற், பரிதியைப்போற் கிழக்கிலிருந்து மேற்கே சென்றனவென் றெண்ணக் கிடக்கின்றது. இன்று மேற்றிசை நாடுகள் பல்வேறு துறைகளிற் சிறந்து விளங்குகின்றன. இதனாலும், மேற்றிசை உயர்ந்தது, கீழ்த்திசை தாழ்ந்த தென்றுசொல்லுதல் ஒல்லும். ஆனால், மேற்கிற் சென்ற சூரியன் கிழக்கிலுதிப்பது போலவே, மேல்நாடுகளுக்குச் சென்ற ஆட்சியும் மாட்சியுங் கீழ்நாடுகளுக்குத் திரும்பிவருமென்று நம்புதற்குரிய அறிகுறிகள் இஞ்ஞான்று காணப் படுகின்றன. அந்நிலே விரைவில் வருக.

மேற்கு கிழக்கு என்ற திசைகளை உலகோடு பொருத்தி நோக்குவோமாயின், மேற்கிலுள்ளோர் பெரும்பாலும் வெண்மக்களென்ப

---

1. Italy 2. Spain 3. France
4. England 5. The United States of America

தும், கிழக்கிலுள்ளோர் கறுப்பு அல்லது மஞ்சள் நிற மக்களென்பதும் வெளிப்படை. நிறத்திலும் உயர்வுதாழ்வு உண்டுகொல்! பேரறிஞராயிருப்போர் உயர்வுதாழ்வுகளை நீக்கி யாவற்றையுஞ் செம்மைசெய்யக் கடமைப்பட்டோராவர். தாழ்ந்த வடதிசையை யுயர்த்தி வையகத்தைமுன் சமநிலைப்படுத்திய அகத்தியனார் போலவே, மேற்கிற்குங் கிழக்கிற்குமுள்ள ஏற்ற இறக்கங்களைத் தொலைத்து, ஒற்றுமையுண்டாக்கி, அகன்ற இவ்வையக வாழ்க்கை நன்னெறியிற் செல்லுமாறு அதை யமைக்கக் கூடிய திறமை நிறைந்த முனிவரும் புலவரும் இக்காலத்திற் றோன்றுதல் வேண்டும்.

மேற்கு, கிழக்கு என்ற திசைகளில் ஒன்றுயர்ந்தது, ஒன்று தாழ்ந்தது என்ற கருத்து அப் பெயர்களிலேயே அமைந்துள்ளவாறு வடக்கு, தெற்கு என்ற திசைகளில் ஒன்று மேலானது ஒன்று கீழானது என்ற கருத்துண்டாவதற்கு அப் பெயர்கள் இடந்தரவில்லை. இங்ஙனமாயினும், இவற்றிலொன்று மற்றொன்றைவிடச் சிறந்ததென்ற நினைவுமட்டும் பண்டுதொட்டு இன்றுவரை இந்நாட்டு மக்கள்பாலுண்டு. அஃதெங்ஙன மெழுந்ததென்பதை எடுத்துக்காட்டுவோம்.

## உ. வடக்கினுயர்வுந் தெற்கினிழிவும்

வடக்குயர்ந்தது, தெற்கிழிந்தது என்ற கொள்கை மிகப் பழையகால முதற்கொண்டு இந் நாட்டிலுண்டென்பதற்குச் சான்றுகள் பண்டைத்தமிழ்நூல்களில் ஆங்காங்குக் காணக் கிடக்கின்றன. இப்பொழுது வழக்கிலுள்ள தமிழ்நூல்களெல்லா வற்றிற்கும் முந்திய தென்று மதிக்கப்படுகின்ற **தொல்காப்பிய**த்தின் பாயிரத்துள்,

> 'வடவேங்கடந் தென்குமரி
> யாயிடைத்
> தமிழ்கூறு நல்லுலகத்து'

என்று தமிழ்நாட்டெல்லைகள் வரையறுக்கப் படுகின்றன. இதில் வடவெல்லை முதற்கண் நவிலப்படுவதை மனத்தில் வைக்கவேண்டும். இதுபோன்றே **புறநானூறு** என்ற பண்டைத் தொகைநூலில் தொன்மை வாய்ந்த பாடலு ளொன்ருகிய ஆறுவது செய்யுளும்,

> 'வடாஅது பனிபடு நெடுவரை வடக்கும்,
> தெனாஅது உருகெழு குமரியின் தெற்கும்,
> குணாஅது கரைபொரு தொடுகடற் குணக்கும்,
> குடாஅது தொன்றுமுதிர் பௌவத்தின் குடக்கும்.'

என்று வடக்கையே முன்வைத்து இந்தியாவி னெல்லைகளைக் கூறுகின்றது. மற்றும் பாரதப் போரில், பாண்டவர்க்குங் கௌரவர்க்கும்

சோறு கொடுத்துப் புகழ்பெற்ற காரணத்தால், **சேரமான் பெருஞ்சோற்றுதியஞ் சேரலாதன்** எனப் பெயர்கொண்ட மன்னனை, **முரஞ்சியூர் முடிநாகராயர்** வாழ்த்திய மற்றொரு பாடலில்,

"பாஅல்புளிப்பினும் பகலிருளினு
நாஅல்வேத நெறிதிரியினுந்
திரியாச் சுற்றமொடு முழுதுசேண் விளங்கி
நடுக்கின்றி நிலியரோ வத்தை யடுக்கத்துச்
சிறுதலை நவ்விப் பெருங்கண் மாப்பிணை
யந்தி யந்தண ரருங்கட னிறுக்கு
முத்தீ விளக்கிற் றுஞ்சும்
பொற்கோட் டிமயமும் பொதியமும் போன்றே."

என வடக்கிலுள்ள இமயத்தை முற்கூறித் தெற்கிலுள்ள பொதியத்தைப் பிற்கூறினமை காண்க. இவ்வாறே **பதிற்றுப்பத்தின்** இரண்டாம்பத்து முதற்செய்யுளின் இறுதியில்,

"ஆரியர் துவன்றிய பேரிசை இமயந்
தென்னங் குமரியொ டாயிடை
மன்மீக் கூறுநர் மறந்தபக் கடந்தே."

என்று வடபாலுளதாகிய இமயத்தை முந்தியும், தென்பாற்குமரியைப் பிந்தியும் வைத்தமை யறிதற்பாலது. இவற்றிற்குக் காலத்தாற் பிற்பட்ட **சிலப்பதிகாரம்,**

"நெடியோன் குன்றமுந் தொடியோள் பௌவமுந்
தமிழ்வரம் பறுத்த தண்புனல் நாடு."

என்று தமிழெல்லை கூறுகின்றது. நெடியோன் குன்றமென்பது வேங்கடம்; தொடி

யோள் பௌவமென்பது குமரிக்கடல். ஈண்டும் வடவெல்லையே முதலில் வந்தது. சிலப்பதிகார உரையாசிரியராகிய **அடியார்க்கு நல்லார்**, மேற் குறித்த அடிகளுக்கு உரையெழுதுங்கால், இப் பொழுது வழக்கிலில்லாத **இசைநுணுக்கம்** என்ற நூலை இயற்றிய **சிகண்டியார்** என்னும் புலவர் கூறுவதாகப், பின்வரும் இரண்டடிகளைக் காட்டுகின்றார்:—

"வேங்கடங் குமரி தீம்புனற் பௌவமென்
றிந்நான் கெல்லை தமிழது வழக்கே."

வடக்கை முன்வைத்தலென்ற மரபை ஈண்டுங் காண்கின்றோம். இனி, **காக்கைபாடினியார்**,

"வடக்குந் தெற்குங் குடக்குங் குணக்கும்
வேங்கடங் குமரி தீம்புனற் பௌவமென்
றிந்நான் கெல்லை யகவயிற் கிடந்த
நூலது முறையே வாலிதின் விரிப்பின்"

என்றுரைத்தார். இங்ஙனம் எல்லை கூறவந்த புலவர் பலரும் வடக்கையே முன்வைத்துப் பாடினர். இம்முறையில் நாம் எடுத்துக்காட்டக் கூடிய மேற்கோள் இன்னும் பலவுள. ஆயினும், எல்லோரும் இம்முறையையே பின்பற்றினு ரென்று சொல்லொணாது. **புறநானூற்றுப்** பதி னேழாஞ் செய்யுளில்,

"தென்குமரி வடவேங்கடங்
குணகுட கடலாவெல்லை"

என்று தெற்கை முதற்கண் வைத்திருக்கின்றது. இருப்பினும், பெரும்பாலும் வடக்கையே முதற்கூறுவது மரபெனக் கொள்க.

“எந்நிலத்து வித்திடினுங் காஞ்சிரங்காழ் தெங்காகா
தென்னாட் டவரும் சொர்க்கம் புகுதலால்
தன்னாற்றா னாகு மறுமை வடதிசையும்
கொன்னாளர் சாலப் பலர்”

எனும் **நாலடியா**ரில், ‘தென்னாட்டவரும்’, வடதிசையும் என்பவற்றிலுள்ள உம்மைகள் முறையே உயர்வுசிறப்பும், இழிவுசிறப்புங் காட்டுவனவாம். ‘சுவர்க்கம் போகின்றவர் தென்னாட்டிலு முளர், பழிபாவ மியற்றுகின்றவர் வடநாட்டிலு முளர்’, என்று மொழிந்ததால், பொதுவாகத் தென்னாட்டில் வாழ்கின்றவர் அல்லவை புரிந்தொழுகுபவர், வடநாட்டில் உறைபவர் புண்ணியரென்ற கருத்து அக்காலத்திலிருந்ததென்பது பெறப்படுகின்றது. இச் செய்யுளில் இழிவும் சிறப்பும் மக்கள்மேல் ஏற்றப் பட்டனவாயினும், அவை இடம்பற்றி வந்தனவென்றே நாம் கொள்ளல்வேண்டும்.

இடத்தினல் இழிவும் சிறப்பும், பாவமும் புண்ணியமு முண்டாமென்ற கொள்கை மேற்கூறிய செய்யுளை இயற்றிய புலவர்க்கு அமைதியளித்திலது. அவரவர் செய்யும் வினைகளாலேயே உயர்வுந்தாழ்வும் பிறக்கின்றன வென்

பதை வலியுறுத்தும்பொருட்டு, "எந்நிலத்து வித்திடினுங் காஞ்சிரங்காழ் தெங்காகா," என்ற உவமையைக் காட்டுகின்றார். வடநாட்டில் வேம்பு வைத்தால், அது கரும்பாய் மாறாது; தென்னாட்டில் கரும்பு வைத்தால், அது வேம்பாய்த் திரிந்திடாது. நிலத்தினியல்பால் மக்களிலும் மரங்களிலுஞ் சிறிது வேற்றுமை தோன்றுவ துண்மையாயினும், அது கொண்டு ஒரு நிலத்தில் ஒன்றாயிருப்பது வேறு நிலத்திற் பிறிதொன் றாகுமெனல் அறிவிற் கொவ்வாது. உண்மை இவ்வாறிருப்ப, முற்காலத்து மக்கள் நிலத்திற்கேற்ப இம்மையிலேயே யன்றி, மறுமையிலேயும் மக்களுக்கு உயர்வு தாழ்வுண்டென்று கருதியதைத் தவறென்று விலக்கும்பொருட்டே இந்த நாலடியார்ச் செய்யுள் எழுந்ததாகும். இது குறித்து விரித்துரைப்பின் எடுத்த பொருள் இடர்ப்படுமாதலால், இத்துடன் நிறுத்தி வடதிசையின் சிறப்பு முற்கால மாந்தருள்ளத்தில் எவ்வளவு ஆழ்ந்து பதிந்திருந்த தென்பதைக் காட்ட இந் நாலடி துணைசெய்வதைக் கருதும்படி வேண்டுகின்றோம்.

"வசையில்புகழ் வயங்குவெண்மீன்
திசைதிரிந்து தெற்கேகினும்
தற்பாடிய தளியுணவிற்
புட்டேம்பப் புயன்மாறி

*வான்பொய்ப்பினுந் தான்பொய்யா*
*மலைத்தலைய கடற்காவிரி*
*புனல்பரந்து பொன்கொழிக்கும்*
*விளைவரு வியன்கழனி"*

—பட்டினப்பாலை

இவ்வரிகளிற் சோழன் **கரிகாற் பெருவளத்தான்** இருந்து செங்கோலோச்சிய **காவிரிப்பூம்பட்டினத்தின்** பெருமையைக் கூறப்புகுந்த புலவரான **உருத்திரங்கண்ணனுர்,** முதலிற் காவிரி யாற்றின் மேன்மையை எடுத்துரைக்கின்ருர். மேற்காட்டிய செய்யுளில் முதல் இரண்டடிகளே ஈண்டு எடுத்துக்கொண்ட பொருட்கு வேண்டப்படுவனவாகும்.

'வசையில்புகழ் வயங்குவெண்மீன்'

என்பது சுக்கிரன்[1] என்ற கோளைக் குறிக்கின்றது. இது தமிழில் **வெள்ளி** எனப்படும். வெண்மீன் என்பதன் பொருளுமஃதே. மழையின்றி இவ்வையகம் வருந்துங்காலத்தில் சுக்கிரன் என்ற கோள்[2] தன் இயல்பான நெறியாகிய கீழ்த்திசையிலிருந்து மேற்றிசைக்குச் செல்லுஞ் செலவில் சிறிது தெற்காகப் போகுமென்று முன்னேர் கருதினர் என்பதைத் 'திசை திரிந்து தேற்கேகினும்' என்பதாற் காண்கின்ருேம். இவ்வாறு மழைபெய்யாது ஞாலம் இடருற்றவிடத்துங் காவிரியில் நீர்

1. Venus 2. Planet

பெருகுமென்று புலவர் மொழிகின்ருர். சுக்கிரன் தெற்கேகுதல் முற்காலத்தில் நிகழ்ந்த உண்மை நிகழ்ச்சிதானே அன்ரு நாமறியோம். விண்ணி லுள்ளவற்றைப் பற்றிய ஆராய்ச்சி மிக நுண்ணியவகையில் செய்யப்படும் இக்காலத்தில், வானநூல்வல்லார்தாம், இதனை ஆய்ந்து முடிபு கூறுதற்குரியர். இது நிகழாச் செய்தியாயினும் நாம் கூறுவது பொய்யாகமாட்டாது; என்னை? நாம் இங்கெடுத்துரைப்பது முன்னுளிருந்த மக்களுள்ளத்தில் தோன்றிய நினைவுகளே யன்றி, அவர்கள் கூறிய நிகழ்ச்சிகளின் உண்மைகளன்ருகலின்.

முற்காலத்துத் தமிழ்ப் புலவர் விண்மீன்களை நன்கறிந்திருந்தன ரென்பதற்குச் சான்றுகள் பலவுண்டு. வெள்ளிக்கோளை இந்நாளிலும் சோதிடவல்லார் மழைக்குரிய கோளென்று கொள்கின்றனர். தெற்கே வெள்ளி ஏகிடின் வறப்புண்டாகுமென்பதை வேறு புலவர்களுங் குறித்திருக்கின்றனர்.

"மைம்மீன் புகையினுந் தூமந் தோன்றினுந்
தென்றிசை மருங்கின் வெள்ளி யோடினும்
வயலக நிறையப் புதற் பூமலர
மனைத்தலை மகவை யீன்ற வமர்கண்
ஆமா நெடுநிரை நன்பு லாரக்
கோஒல் செம்மையிற் சான்ருேர் பல்கிப்
பெயல்பிழைப் பறியாப் புன்புலத் ததுவே"

—புறநானூறு

ஈண்டு 'மைம்மீன்' என்றது சனியை[1]. மைம்மீன்[2] என்பது 'கரிய நட்சத்திரம்' எனப் பொருள்படும். சனியைக் கரியவனென்றும், வியாழனைப் பொன்னனென்றுங் கூறுவர் சோதிடர். இப்பாடல் "புலனழுக்கற்ற வந்தணாளன்," எனத் தம் புகழ்நிறுத்திச் சுவை நனிபெருக இனிது பாடுமாற்றல் பெற்ற **கபிலர்** செய்தது. இவர் **பாரி** என்ற ஈகையிலுயர்ந்த குறுநில மன்னனுடைய உயிர்த் தோழராயிருந்து, அவனிறந்தபின் அவன் மகளிரைத் தம்முடனழைத்துக்கொண் டேகுங்கால், அவனுண்ட பறம்பு மலையை நோக்கிப் பாடியதாகும் இது. பாரி இறந்ததும், அவன் மகளிருக் கேற்ற கணவரைத்தேடிக் கபிலர் அலைந்ததும் உளத்தை யுருக்குந் தன்மையன. வள்ளலாகிய பாரியின் நாட்டில், "தென்றிசை மருங்கில் வெள்ளியோடினும் மழை பெய்தல் தவறாது" என்று புலவர் இரங்கி உரைபகர்கின்றார். பாரியினது செங்கோல் கோடாமையின், வெள்ளி தெற்கேகினும் அவன் நாட்டில் மழை

---

1. Saturn; Saturday.

2 "மைம்மீன் புகையினும்" என்பதன் பொருளை நச்சினார்க்கினியர் செய்த உரையானும், மகாமகோபாத்தியாய உ. வே. சாமிநாதையர் கூறும் விளக்கத்தானு மறிக.

பெய்யுமென்றூர். "பொய்யாநாவிற் கபிலன்" என்று ஏத்தப்படும் இப்புலவர் பெருமான் சொன்னதைப் பின்வந்த **இளங்கோவடிகளும்** எடுத்தாள்கின்றூர்:

> "கரியவன் புகையினும் புகைக்கொடி தோன்றினும்
> விரிகதிர் வெள்ளி தென்புலம் படரினும்"
>
> —சிலப்பதிகாரம்

புலவர் பலர் ஒருமுகமாகச் சொல்லும் இச் செய்தி சுக்கிரன் தென்றிசை செல்வதால் உலகிற்குக் கேடு விளையுமென்ற கொள்கையை ஐயமற நிறுவுகின்றது. இதனுலுந் தெற்கென்பது மக்களது நன்மைக்கடுத்த திசையன்று, அது தீங்கையே குறிப்பதாகும் எனும் எண்ணமிருந்தமை திண்ணமாதல் காண்க. இதன் காரணமென்ன வென்பது போகப் போகப் புலப்படும்.

## ௫. வடக்கினுயர்வுந் தெற்கினிழிவும்

(தொடர்ச்சி.)

"வடவேங்கடந் தென்குமரி
யாயிடைத்
தமிழ்கூறு நல்லுலகத்து"

என்று தொடங்குந் **தொல்காப்பியப் பாயிரத்**துக்கு உரைகூறுங்கால், **நச்சினார்க்கினியர்**, "மங்கலமரபிற் காரியஞ் செய்வார், வடக்குங் கிழக்கும் நோக்கியுஞ் சிந்தித்தும் நற்கருமங்கள் செய்வாராகலின், மங்கலமாகிய வடதிசையை முற்கூறினார், இந்நூல் நின்று நிலவுதல் வேண்டி. தென்புலத்தார்க்கு வேண்டுவன செய்வார், தெற்கும் மேற்கும் நோக்கியும் செய்வாராதலின், தென் திசையைப் பிற்கூறினார்," என்றெழுதுகின்றார். சிறப்புப்பற்றி வடதிசையை முதற்கூற வேண்டுமென்ற கருத்து ஈண்டு வெளிப்படுகின்றது.

நச்சினார்க்கினியர், வடதிசை மங்கல மாவ தெங்ஙனம் என்று சொல்லவில்லை. அஃது எல்லோராலும் ஏற்றுக்கொள்ளப்படும் ஒருண்மை என்று அவர் கருதியதே அதையவர் விளக்காது மேற்சென்றமைக்குக் காரணம். அழியா நிலையுடைய வைகுண்டம் கைலாயம் ஆகிய இவை வடக்கிலுள்ளன; வடதிசை பொருட்செல்வப்

பெரியோனுகிய குபேரனுக் குரியது; தென்றிசை, உயிர்களுக்கு இறுதிபயக்கும் இயமனுக் குரியது. இவ்வுண்மைகள் இந்நாட்டிலுள்ள மக்களால் நன்குணரப்படுமாதலின், வடதிசை மங்கல திசையா மென்று அவர் கூறிப்போந்தார். இஃதொக்குமாயினும், வைகுண்டமுங் கைலாயமும் வடதிசையில் அமையவேண்டிய தேன், இயமன் தென்றிசைப் பாலனுவது யாதுபற்றி என்ற கேள்விகள் எழுமாயின், அவற்றிற்கு விடையளித்தல் வேண்டும். அவற்றிற்கு விடை காண்பதே நமது முயற்சி.

"தென்புலத்தார்க்கு வேண்டுவன செய்வார்," என்றது,

"தென்புலத்தார் தெய்வம் விருந்தொக்க லனென்றாங்
கைம்புலத்தா றோம்ப றலை"

என்னுந் திருக்குறளில் வந்துளது. "பிதிரர், தேவர், விருந்தினர், சுற்றத்தார், தான் என்று சொல்லப்பட்ட ஐந்திடத்துஞ் செய்யும் அறநெறியை வழுவாமற்செய்தல் இல்வாழ்வானுக்குச் சிறப்புடைய அறமாம்," என்று **பரிமேலழகர்** இக்குறளுக்கு உரை செய்கின்ருர். செய்தபின், 'தென்புலத்தார்' என்ற சொற்றொடரை விளக்கி, "பிதிரராவர் படைப்புக்காலத்து அயனுற் படைக்கப்பட்டதோர் கடவுட்சாதி;

அவர்க்கிடம் தென்றிசையாதலின், தென் புலத்தாரென்ருர்,'' எனவெழுதுகின்ருர். பிதி ரருமொரு கடவுட்சாதியாயின், தேவர் என்ற சொல்லில் அவரும் அடங்குவர். ஏனெனின்; மூலத்திலுள்ள 'தெய்வம்,' என்ற சொல்லை, 'தேவர்,' என்று பொருள் செய்து, "தெய்வ மென்றது சாதியொருமை,'' என விளக்க முரைக்கின்ருர் **பரிமேலழகர்**. தென்புலத்தார் கடவுட்சாதியாயின், பிறதேவரோடிணங்காது தென்றிசையில் அவரிடங்கொண்ட தெதற்கு, தென்புலத்தார்க்கு வேண்டுவன செய்வது மங் கலமரபிற் காரியமாகாததேன் என்ற வினைக் கள் பிறக்கின்றன. இதிலொரு மயக்கமிருக் கின்றதென்று நினைக்க இடமுண்டு. நிற்க; வடக்குந் தெற்கும் முறையே மங்கலமும் அமங் கலமுமாவதற்குக் காரணமாய சிலவற்றை நோக்குவோம்.

மாநிலத்து மக்கள் முதன்முதலில் அறிந்த திசை கிழக்கெனத் துணிந்துரைக்கலாம். ஏனெனின், செஞ்சுடரோன் நாடோறுங் கிளம்பி இருளை யகற்றுகின்ற திசை அவர்கள் உளத்தைப் பிணித்திருக்கக்கூடும். இக்காலத் தில் இரவைப் பகலாக்கும் ஆற்றல்வாய்ந்த மின்சார விளக்குகள் வீடுகளிலுந் தெருக்களி லும் ஒளிபரப்பும் நகரங்கள் பெருகிவருகின்

றன. இத்தகைய நகரங்களில் வாழ்ந்துவரு கின்ற நாம், சிற்றொளி வீசும் நெய்விளக்கன்றி, வேறு விளக்கறியாத முற்காலத்து மாந்தர் இரவுகழிந்து கிழக்கில் ஒளிதோன்றுவதை எத்துணை ஆவலுடன் எதிர்பார்த்திருப்பா ரென்பதைச் செவ்வனே அறிதல் அரிது. அடர்ந்து இருண்டு அகன்று நீண்டனவும், வல்விலங்கும் நச்சுப்பாம்பும் மலிந்தனவும் ஆகிய காடுகளிடையே, சிதறிக்கிடந்த சிற்றூர் களில் குறுகின தொகையினராய்ப் பண்டை நாள் மக்கள் வாழ்ந்தனர். கொல்புலியுங் கோநாயும், இருளில் வெளிவந்து உறுமித் திரிந்து, தம் ஆடுமாடுகளைக் கௌவிப் பிடிக்க வகை தேடுவதையும், உரமிகுந்த பகைவர் படைக்கலந் தாங்கித் திடீரென்று தோன்றித் தமது உடைமையைக் கவரமுயல்வதையும், பல காலும் அறிந்த பண்டை மக்கள், இராப் பொழுதை நடுக்கத்தோடு கழித்து, அழகிய இளஞாயிறு கிழக்கிலுதிக்குங் காட்சியை எவ் வளவு இன்பத்தோடு எதிர்நோக்கியிருப்பர்! ஆதலின் கிழக்கே முதற்றிசையாகும். சமஸ் கிருதத்தில் இது 'பூர்வதிசை' எனப்படுதலை நோக்குக. கிழக்கிற் கெதிராயுள்ளதென்பது பற்றி மேற்றிசையையும் அவர்கள் முதலி லேயே அறிந்திருக்கலாம். புறவிருள் நீக்கும்

பரிதிபோன்று அகவிருளகற்றுங் கருவியாகிய அறிவை நல்கும், கழிநல்லெழிலுடைய நனியினிய நங்கையாங் கலைமகள் கீழ்த்திசைநோக்கி வீற்றிருப்பள் என்ப. கோவில்களில் அமைக்கப்பட்டிருக்குங் கடவுளரின் உருவங்களும் பெரும்பாலும் கிழக்கு நோக்கியே யிருக்கின்றன.

கிழக்கிற்குப்பின், வடக்கே முதன்மை பெற்றது. அஃது யாங்ஙனமெனவினவுவாம். கண்கள் கூசியொடுங்குமாறு பேரொளிகாலும் பரிதி மேற்றிசை சென்று மறைய, ஒளியுடன்வெப்பமும் நீங்குகிறது; பகலெல்லாம் உழைத்து வியர்த்து உடல்சோர்ந்து உளங்குன்றிய மக்களுக்குச் சிறிது குளிர்ச்சியும் இனிமையுந் தரவிழைவாள்போன்று நானிலமங்கை இருளாகிய போர்வையை யணிந்துகொள்கிறாள்; ஆகாயத்தில் அணிவகுத்துச் செல்கின்ற பெரும்படையென விண்மீன்கள் தோன்றுகின்றன; நாடோறுஞ் செய்ய வேண்டிய கடமைகளிற் பகற்காலமெல்லாம் பதிந்திருந்த மக்களதுள்ளம், இரவில் உண்டு ஆறியபின் சிறிது விடுதலைபெற்று, விண்ணகத்தே விளங்கும் எண்ணில் சோதிகளை உற்று நோக்கி, 'இவை வந்தவாறென்னே!' என்று வியப்புறுவது இயல்பு. பலப்பலவாண்டுகள்

இவற்றை ஊன்றி நோக்கியபின், விசும்பில் திகழும் விண்மீன்களுள் சில பகுதிகள் நாளுக்கு நாள் தம் நிலையில் வேறுபாடடைவதையும், வேறுசில பகுதிகள் யாண்டின் ஒரு கூற்றில் தோன்றி மற்றொரு கூற்றில் மறைவதையும், மற்றுஞ் சில பகுதிகள் எக்காலத்தும் ஒரே நிலையிலிருப்பதையுந் தொன்னாள் மக்கள் உணர்ந்தனர். எக்காலும் நிலையில் மாறாது இனிது விளங்குகிற விண்மீன்கள் **சப்தரிஷி மண்டிலம்**[1] என்ற மீன் கூட்டமும், **துருவன்**[2] என்ற தனிமீனுமாகும். இவற்றிற்கு நேர் எதிரே தெற்கில் தோன்றுவன **தென்சிலுவை**[3] என்ற மீன்கூட்டமும், **அகத்தியர்**[4] என்ற தனி மீனுமாகும். அகத்தியமீனும் தென்சிலுவை யும் யாண்டின் ஒரு கூற்றில் தோன்றி மற் றொரு கூற்றில் மறைகின்றன. தெற்கில் தோன்றுகின்ற தனிமீனுக்கு அகத்தியர் என்று பெயரிட்டது, முன் கைலாயத்தினின்று தென்றிசைபோந்து உலகைச் சமநிலைப்படுத் திய குறுமுனியின் நினைவின்பொருட்டெனல் அமையும். விசும்பிலுள்ள வேறுபல மீன் தொகுதிகளும் கோள்களும் திங்கள்தோறும் நிலைமாறுகின்றன. எவ்விடத்தும் நிலையில்லா

1. The Great Bear
2. The Pole Star
3. The Southern Cross
4. Canopus

மையே தோன்றுவதைக் கண்ட பண்டைநாள் மக்கள் வடக்கிலுள்ள விண்மீன்களின் நிலை கலங்காமையை அத்திசைக் குரியதொரு விந்தையாக நினைந்து மகிழ்ந்தனர். இத்துடன் வேறுசில அரிய செய்திகளும், வடக்கின்கண் உயிருக்கு உறுதிபயப்பன வுண்டென்ற கருத்தை அவர்கள் மனத்திற் பதித்தன. இந்த வேறு செய்திகளைப் பின்னுற் கூறுவோம். தென்திசை மீன்கள் வடதிசையிலுள்ளவற்றைப்போல ஒரு நிலையிலில்லாது மாறுகின்றமை அத்திசையின் தன்மையால் ஆவதே என்று பண்டையோர் எண்ணியிருக்கவேண்டும். முற்காலத்தில் இரவில் பயணஞ் சென்றவர்கட்கு வடக்கிருக்கும் வீண்மீன்கள் திசைகாட்ட எத்துணை உதவி செய்திருக்குமென்பதை நாம் நினைவில் வைக்கவேண்டும். "வடக்குநோக்கி"யின்[1] உதவிகொண்டே சென்ற நூற்றுண்டுக்குமுன் மாலுமிகள் கடலில் நெடுந்தூரஞ் செல்லவியன்றது. இன்றும், இரவில் திசைகாண துருவமீனையே பார்க்கவேண்டியதாக இருக்கிறது.

இவ்வாறெல்லாம் வடக்கிற்குப் பெருமையுண்டாவதால், அருந்தவமியற்றி, வாடாப் புகழ் நிறுத்தி, அழியா நன்னிலை எய்திய அருட்

1. Mariner's Compass

செல்வர்களின் பெயரையே வடக்கிலுள்ள விண்மீன்களுக்குப் பெயராக்கி அத்திசையின் சிறப்பை இந்நாட்டுப் பண்டைப்பெருமக்கள் நிலைநிறுத்தினர்கள். வசிட்ட மாமுனிவரின் சாலச்சிறந்த கற்புடைய மனைவி அருந்ததியைக் குறிப்பிடும் விண்மீனைத் தமிழர் 'வடமீன்' என்பர்.

> "வடமீன்போல் தொழுதேத்த
> வயங்கிய கற்பினள்"
>
> —பாலைக்கலி

என்பது காண்க.

மேற்கண்டவற்றல் வடக்குங் கிழக்குந் தலையாய திசைகள் ஆனமைக்குக் காரணம் விளங்கும். மங்கலமரபிற் காரியஞ்செய்வார், வடக்குங் கிழக்கும் நோக்க வேண்டியதன் அமைதியும் புலனும். இங்ஙனம், முற்காலமுதற் கொண்டு வடக்குயர்ந்துந் தெற்குத் தாழ்ந்து மிருக்கின்றமை ஒருவாறு காட்டப்பட்டது.

## ௪. வடக்கையுந் தெற்கையும்பற்றி வந்த வழக்கங்கள்

பழையகாலங்களி லிருந்தோர், வடக்கைப் போற்றித் தெற்கை வெறுத்தது சரியாயினுந் தவறாயினும், அவர்களுடைய கருத்துக்கள் இந் நாட்டிலுள்ள மக்களது வாழ்க்கையில் இன்றளவும் நாடோறும் வெளிப்படக் காண்கின்றோம். மக்கள் துயிலுங்கால் தெற்கே தலையை வைக்க வேண்டுமென்பது பெரும்பாலோரால் பின்பற்றப்படுகின்றதொரு முறை. மேல் நாம் கண்டவாறு சிறப்பாகிய திசை வடக்காயின், தலையை வடக்கிலன்றோ வைத்துறங்க வேண்டும்; தெற்கே தலையைவைத்துக் காலை வடக்கேநீட்டுதல் பொருந்துமாறென்னை என வினவுதலியல்பே. தெற்கே தலைவைத்தல் நாம் முன் கண்டவற்றோடு முரண்படுமொரு செய்தியன்று. ஊன்றிநோக்கிடின் இது மேற்கூறியவற்றை அரண்செய்வதாகும். தெற்கே தலைவைத்துப் படுத்தாற்றான் எழுங்கால் வடக்குநோக்கி எழுதல் கூடும். அரங்கத்தில் (திருவரங்கம்) கண்வளரும் நிலமளந்த நெடுமாலின் உருவமுந் தெற்கே தலைதங்க அமைந்துளது. வடக்கின் சிறப்புநோக்கித் தெற்கே தலைவைக்க வேண்டுமென்பதையே அது குறிப்பதுபோலும்!

இந்துமதத்தவருள் இறந்தோரைப்புதைக்கும் வழக்கத்தினையுடையவர்கள், தெற்கே தலையும் வடக்கே காலுமிருக்கப் பிணத்தை வைக்கின்றனர். இறந்தவரின் முகம் வடக்குநோக்கியிருக்கவேண்டு மென்ற கொள்கைபற்றியே இவ்வழக்கமெழுந்தது. புதைப்பதையே பெரும்பாலுந் தங்கள் வழக்கமாயுடைய கிறித்தவர்கள், மேற்கே தலையுங் கிழக்கே காலுந் தங்குமாறு இறந்தவரை வைக்கின்றனர். உலக முடிவில் மரித்தவரெவரும் உயிர்பெற்றெழுவர் என்ற நம்பிக்கையே இதற்குக் காரணம். எல்லாமழிந்தபின் உலகோர் எல்லாரும் இறைவன் முன்றோன்றிப் பாவ புண்ணியங்களாகிய தங்கள் கணக்கை யொப்புவிக்க வேண்டும். இறைவன் கீழ்த்திசையில் தோன்றுவானென்ற கருத்துப்பற்றி, மரித்தவர் தலை மேற்கேயிருக்குமாறு புதைக்கப்படுகின்றனர். இதுபோன்றே வடக்கே கைலாயமும் வைகுண்டமும் இருக்கின்றன வென்று நினைக்கும் இந்நாட்டினர், தெற்கே தலையைவைத்து மாண்டவர்களைப் புதைக்கின்றனர்.

ஓரிடத்திலிருந்து மற்றோரிடத்திற் குடிபுகும்பொழுது தெற்கிருந்து வடக்கே போகலாம், வடக்கிலிருந்து தெற்கே செல்லலாகாதென்ற நம்பிக்கை பலரிடத்திலுண்டு. தெற்கே

சென்றால் அழிவும் இழிவும் உண்டாமென்றும், வடக்கே சென்றால் வாழ்வுண்டா மென்றும் இத்தகையோர் நினைக்கின்றனர். இஃதிங்ஙன மாயினும், வடக்குநோக்கிய வீடுகளைவிடத் தெற்குநோக்கிய வீடுகளே சிறந்தனவாம். இவ்வகையில்மட்டும் தெற்குச் சிறப்பாவதேனென்றால், இங்கே வேறோர் உண்மை புலப்படுவதாகும். இந்நாட்டில் குளிர்காலத்தில் வடக்கிலிருந்து காற்று வீசுகின்றது. இது **வாடை** என்று பெயர்பெறும். வெயிற்காலத்தில் பெரும்பாலுந் தெற்கிலிருந்து காற்று வீசுகின்றது. இது **தென்ற**லெனப்படும். யாண்டிற் பெரும்பகுதி வெயிற்காலமுள்ள நமது நாட்டிற்குத்தென்றல் உள்வந்துலாவுமாறு அமைக்கப்படும் வீடே நல்லது. இதனாலேயே, தெற்கு நோக்கிய வீடுகளை மக்கள் விரும்புகின்றார்கள். குடிபுகும் திசை தெற்காயிருத்தல் கூடாதென்பது பொதுவிதி; குடிபுகும் வீடு தெற்குநோக்கியிருத்தல்வேண்டுமென்பது சிறப்புவிதியெனக் கொள்க.

இனி, மருத்துவத்துறையில், மரஞ்செடி கொடிகளின் வேர்கள் வேண்டப்படுமாயின், வடக்கே ஓடும் வேர்களே சிறந்தவை என்று மதித்தெடுக்கப்படுகின்றன. வடக்கேயோடும் வேர்களுக்கே மிகுந்த ஆற்றலுண்டென்று

கருதப்படுகின்றது. மருத்துவநூல்களில் வடக் கோடும் வேரை எடுக்கவேண்டுமென்று விதித் தது, அத்திசை அழிவைத் தடுப்பது, கேட்டை விலக்குவது என்ற எண்ணத்தாலேயே. ஒரு வேளை இக்காலத்தில் நாம் இதை நினைந்து நகைக்கினும் நகைக்கலாம். ஆனால் முற்கா லத்து மக்களுக்கிருந்த எண்ணங்களையும் அச் சங்களையும் அவர்கள் வாழ்ந்துவந்த நிலைமை யையும் நன்கறியவல்லார் நகையார். மற்றும், அவர்கள் கொண்ட நினைவிற்குத்தக்க அரண்க ளுண்டென்பது பின்வரும் அதிகாரங்களில் தெளிவாக விளங்கும்.

பிறைச்சந்திரனை யுற்றுநோக்கி, அதன் வடகோடு உயர்ந்திருந்தால் நலமென்றும், தென்கோடுயர்ந்திருந்தால் தீதென்றுங் கூறு கின்ற வழக்கம் நாட்டுப்புறங்களில் இன்று முண்டு. திங்களின் ஒரு கோடுயர்வதும், மற் றொரு கோடு தாழ்வதும் எதிர்பாராமல் நிகழ் வனவல்ல. உலகைச் சுற்றிவரும் நிலவின் வெவ்வேறு நிலைகளே ஒரு கோடுயர்ந்து தோன்றுவதற்கும் மற்றொரு கோடு தாழ்ந்து தோன்றுவதற்குங் காரணமாம். எல்லா வகை யிலும் வடக்குத்திசையே யுயர்ந்ததென்ற நினைவு எவ்வளவு ஆழமாய் மக்கள் உள்ளத்தில் பதிந்துகிடக்கிறதென்பதற்கு இஃதோ ரெடுத்

துக்காட்டாகின்றது. வாழைத் தோட்டங்களில் முதன்முதல் வருகின்ற குலை வடக்குநோக்கித் தள்ளப்படுமாயின், தோப்பின் விளைவினுல் மிகுந்த ஊதியங் கிடைக்குமென்றும், தெற்கு நோக்கித் தள்ளப்படுமாயின், தோப்பு வைத்த வனுக்குச் சிறிதுபயனே கிடைக்குமென்றுஞ் சில இடங்களில் மக்கள் எண்ணுகின்றனர். முதற்குலை தெற்குநோக்கி வருமாயின், அதை வேறு திசைக்குத் திருப்பவும் முயல்கின்றனர்.

வேதமோதப்போகிற மாணவன் வடக்கு அல்லது கிழக்கு முகமாகக் கைகளைக் கட்டிக் கொண்டு ஓதவேண்டுமென்ற வழக்கொன்றும் உளது. கலியாணமாகும்பொழுது மணமகனும் மணமகளுங் கிழக்குநோக்கியிருப்ப, சடங்கு களை நடத்துகின்றவர் வடக்குநோக்கி அமர் தல் மரபு. மணப்பந்தலில் அம்மி வடக்கே இடம்பெறும். அம்மி மிதித்தலாகிய செய்தி கலியாணச்சடங்குகளில் முதன்மையானவற்று ளொன்று. இது, மணமகள் கற்பொடு வாழ வேண்டு மென்பதற்கு அறிகுறியாகிய செய லென மொழிவர். "கற்பிழந்தால் காலால் மிதியுணும் நிலையையும், கற்புயர்ந்தால் அருந் ததிபோல் வானில் விளங்கும் சிறப்பையும் மணமகள் எய்துவள்" என்ற கருத்து இதன் கண் உளதென்பாருமுளர். கற்பிழந்தமையாற்

கல்லாகிக் கிடந்த அகலிகை, மிதிலைநோக்கி விசுவாமித்திரருடன் நடந்த இராமனது காலால் தீண்டப்பெற்று உயிருடனெழுந்தன ளென்பதற்கு அடையாளமாக, வடக்கின்கண் கல்வைத்து மிதிக்கப்படுகின்றதெனவும் இயம்புவர். ஆனால், நிலைமாறுமை வடக்கினது பண்பென்று முன்னோர் நினைத்தனரென்று நாம் மேலே விளம்பியது சரியெனின், கற்புநிலை குலையாது வாழவேண்டுமெனுந் துணிபிற்கு அடையாளமாக வடபாலொரு கல்லைவைத்து மிதித்தலில் மற்றொரு பொருள் மிளிர்கின்றது. கற்பென்பது நிலைமாறுமை அல்லது நிலைகலங்காமையேயாகும்.

> "பெண்ணிற் பெருந்தக்க யாவுள கற்பெனுந்
> திண்மையுண் டாகப் பெறின்"

என்ற குறளில் வருங் "கற்பெனுந் திண்மை" என்ற சொற்றொடர்க்குக் "கற்பெனுங் கலங்கா நிலைமை" என்று பொருள்கூறினர் **பரிமேலழகர்**. எளிதில் நிலைபெயராமையே கலங்கா நிலைமையாகும். இப் பண்பைத்தான் திண்மை என்று **வள்ளுவர்** கூறினர். திண்மை என்பது கல்லின் பண்பு. கல்லிற்குக் கற்பென்ற பெயருமுண்டு.

"பீடார் கமலப் பெரியோ னருளினல்
வாடாக் கற்பின் வலியொடு வந்த
இருபது தடக்கை ஒருபது முடியோன்."

என்று **பெருந்தேவனர் பாரதத்**துள் கற்பென்பது 'கல்' என்ற பொருளில் வந்தது. ஆதலின், நிலையுடைத்தென்ற வடதிசை கற்பிற்கிட மாயிற்று. தெற்கு உறுதியற்ற திசை யென்ப தற்கும், வடதிசை நிலைபெற்ற தென்பதற்கும் சான்று மேலுங் காண்போம்.

## ரு. வடக்குந்தெற்கும் முறையே மேற்குங் கிழக்குமாதல்

நாம் வாழ்கின்ற இவ்வையகம் சூரியமண்டலத்தைச்[1] சேர்ந்த கிரகங்கள் அல்லது கோள்களில் ஒன்று. இவ்வையகத்தோடு செவ்வாய்,[2] புதன்,[3] வியாழன்,[4] வெள்ளி,[5] சனி[6] ஆகிய இவையும், வேறுசில கோள்களுஞ் சூரியனைச் சுற்றிவருகின்றன. இவையாவும் சூரியனை நடுவாகக்கொண்டு இயங்குகின்றமையால் இவற்றைச் சூரியமண்டலத்தைச் சார்ந்தவை என்று சொல்லுகிறோம். திங்களென்பது ஓர் உட்கோள் அல்லது உபகிரகம். பூமி சூரியனைச் சுற்ற, சந்திரன் பூமியைச் சுற்றுவதால் அஃது உபகிரகமெனப்படுகிறது. இக்கிரகங்களெல்லாம் தம்மில் தாமே ஒளிசெய்வனவல்ல என்பதும் இவற்றிற்குவேண்டிய ஒளியைப் பரிதியிலிருந்தே பெறுகின்றன வென்பதும் யாவருமறிந்தவையே. பரிதியிலிருந்து ஒளிபெற்று, அவ் வொளியை நமக்குத் தரும் கோள்களில் திங்களே ஏனைய கோள்களைவிட மிக்க வெளிச்சத்தை நமக்குத் தருகின்றதென்பதுகொண்டு விண்ணிலுள்ள ஒளிப்பிழம்புகளை சூரிய சந்திர

---

1. Solar System 2. Mars 3. Mercury 4. Jupiter 5. Venus 6. Saturn

நட்சத்திரங்களென்று முறைப் படுத்திச் சொல்லுமொரு வழக்கெழுந்தது. சூரியனை விடப் பெரியவையும் மிக்க ஒளியுடையவையு மான விண்மீன்களுமுண்டு. இத்தகைய விண் மீன்கள் தொலைநோக்காடிகள்[1] வாயிலா னல்லது வேறுவகையிற் புலப்படாவாதலின், வெறுங்கண்ணிற் கெட்டியவரையிற் சூரிய சந்திர நட்சத்திரங்களென்று முறைப்படுத்திச் சொல்லுதலமையும். இக்காரணத்தாற் சூரி யனை முதலில் வைத்து ஞாயிற்றுக்கிழமை[2] என் றும்; அடுத்தபடியாகச் சந்திரனை வைத்துத் திங்கட்கிழமை[3] என்றும்; வையகத்திற்கு அண்மையா யிருப்பதுபற்றியும், செம்மையா யிருப்பதுபற்றியும் செவ்வாயைத் திங்களுக்குப் பின்வைத்துச் செவ்வாய்க்கிழமை என்றும்; பிறகு, திங்களின் மகவென்று சோதிடவல்லார் மதிக்கும் புதனைவைத்துப் புதன்கிழமை என் றும்; அதன்பின் சேய்மைபற்றியும், ஒளிவீசும் ஆற்றல்பற்றியும், தேவகுரு என்ற மேன்மை குறித்தும் வியாழனை அமைத்து வியாழக்கிழமை என்றும்; அசுரகுரு என்ற கொள்கையினுல் சுக்கிரனென்ற வெள்ளியை அடுத்தபடியில் வைத்து வெள்ளிக்கிழமை என்றும்; சூரியன் மகனென்று கருதப்படுஞ் சனியை ஞாயிற்றை

---

1. Telescopes 2. Sunday 3. Monday

யொட்டி வைத்துச் சனிக்கிழமை என்றும் வாரத்திலுள்ள நாட்களின் வரிசை பிறந்தது போலும்.

அளவற்ற விசும்பிலே இவை யொன்றை விட்டொன்று அகலநின்று சூரியனை வட்ட மிடுகின்ற காட்சி அகக்கண்ணாற்பார்த்து மகிழ் தற்குரியது. இவை சூரியனைச் சுற்றி வட்ட மிடுங்கால் பம்பரம்போல் சுழல்கின்றனவே யொழிய, பந்து தரையிலுருள்வதுபோற் சுழல் வதில்லை. பம்பரஞ் சுற்றுங்கால் ஒருபுறம் எப் பொழுதும் மேலேயே யிருக்கின்றது; மற்றொரு புறங் கீழேயே யிருக்கின்றது. மேலுள்ள பாகங் கீழ்வருமாறுங் கீழுள்ளபாகம் மேல்வருமாறும் பம்பரம் இயங்குவதில்லை. பம்பரம் ஆகாயத் தில் நின்று சுழன்றுகொண்டு ஒரு பொருளைச் சுற்றி இயங்குவதுபோல், அகக்கண்ணால் ஒரு காட்சியை நாம் வகுக்கக் கூடுமாயின், அது கோள்கள் சூரியனைச் சுற்றிவரும் நிகழ்ச்சியை நன்கெடுத்துக் காட்டும். பிற கோள்களைப் போலவே ஒருபுறம் மேலேயும் மற்றொருபுறங் கீழேயுமாய் எப்பொழுதும்நிற்க,நிலவுருண்டை கதிரவனைச் சுற்றிவருகின்றது. இதனால், பூமியைப் படமாக வரைந்து காட்டுவோர் மேலேயுள்ள பாகத்தை மேலும், கீழேயுள்ள பாகத்தைக் கீழும் அமைத்து எழுதுகின்ற

னர். பூகோளபடத்தைப் பார்க்கும்பொழுது வடக்கு மேலேயுந் தெற்குக் கீழேயு மிருப்ப தைக் காண்கின்றோம். இந்தியாவின்படத்தை நோக்குங்கால், குமரிமுனை தெற்கே இருக்கு மாறு அப்படம் வரையப்பட்டிருக்கின்றது. பூமி உருண்டையாயிருப்பதால், மேல், கீழ் என்ற வரையறையில்லாது தெற்கு மேலேயும் வடக்குக் கீழேயும் அமையுமாறு ஏனெழுதக் கூடாதென்றால், பூமி தலைகீழாக உருளுவ தில்லை; வடதுருவம் மேலேநிற்கத் தென்துரு வம் கீழேநிற்க, மேற்கிலிருந்து கிழக்காக அது செல்கின்றதென்பதே விடை. ஆதலின், வட திசை உயரவிருப்பது, தென்திசை கீழேயிருப்ப தெனல் யாண்டும் பொருந்தும். உயர்ந்திருக் குந் திசையை மேற்கென்றும், தாழ்ந்திருக்குந் திசையைக் கிழக்கென்றும் மொழிதல் தமிழ் வழக்கென்று நாம் முன்கண்டதனால், வடக்கு மேற்காவதும், தெற்குக் கிழக்காவதும் எளிதிற் பெறப்படும்.

உயர்ந்திருக்குந் திசை என்ற காரணத்தால் முன்னோர் வடக்கைச் சிறந்த திசை என்று கொண்டனர் என்போமாயின், அவர்கள் வையகம் உருண்டை வடிவினதென்றும், அது வடக்குயர அமைந்துள தென்றும் அறிந்தனர் கொல் என்ற கடாவெழும். புராதன காலத்

திருந்த மக்கள் பூமியைத் தட்டை வடிவின தாகவே நினைத்தனரென்று கொள்ளச் சான்றுகள் பலவுள. ஆனால், நமது நாட்டில் பல கடவுளர் வழிபாடு, இயற்கை வணக்கம், எல்லாங்கடந்த பரம்பொருளை அறிவாலுணர்ந்து அதனோடொன்றுதல் ஆகிய பலவகைக்கொள்கைகள் ஒன்றையொன்றொழித்திடாது இந்நாளளவும் மக்களால் ஏற்றுக்கொள்ளப்படுவதை யொப்ப, வையகத்தைக் குறித்த பல வகை நினைவுகள் ஒன்றோடொன்று முரண்பட்டு அழியாது இன்றளவும் இருக்கின்றன. தட்டை வடிவின தாகிய வையகத்தை அட்டதிக்குக் கசங்கள் தாங்குகின்றனவென்றும், ஆயிரந் தலையுடைய ஆதிசேடன் பூமியைத் தாங்குகின்றானென்றும், புராணங்க ளறைய, அண்டமென்ற சொல்லை உலகமென்ற பொருளில் வழங்குகின்ற மரபொன்று மிருக்கின்றது. அண்டமென்பது முட்டையாதலின், பூமியை முன்னோர் முட்டைவடிவினதாக நினைத்தன ரென்பதும் பொருந்தும். இஃதுண்மையாயின், வடதிசை மேலிருக்க வையக உருண்டை அமைந்துளதென முன்னோர் எண்ணினரென்பது இழுக்காகாது. இதுபற்றியொரு திண்ணமான முடிபிற்கு வருதல் அரிது. இனி வேறு சான்றுகளும் உள.

நரகலோக மென்பது பூமிக்குக் கீழிருப்ப தென்று பலப்பல சமயங்களைத் தழுவிய மக்களும் நம்பினர், இன்றும் நம்புகின்றனர். உலகந் தட்டையாக விருக்குமாயின், எத்திசையின் முடிவிலும் நரகத்திற்கு வழியுளதாதல் வேண்டும். ஆனால் முன்னோர் இங்ஙனங்கருதினரில்லை. நரகம் ஒரே திசையிலிருப்பதாகத் தான் அவர்கள் எண்ணினார்கள். அத்திசை தெற்கு; ஏனெனின், பழிபாவங்க ளியற்றிய உயிர்கள் மரணத்திற்குப்பின், இயமனது தூதனிடம் தென்றிசையிலுள்ள நரகத்திற்குக் கொண்டுபோகப்படுகின்றன என்ற கொள்கை புராணங்களில் வெளிப்படுகிறது. கீழ்நோக்கிய திசை தெற்கென்று அவர்கள் கருதாவிடின், நரகத்தைத் தெற்கில் வைத்திருப்பார்களா? மரணம் நரகம் என்ற இரண்டிற்கும் இடமாயுள்ள தென்திசை அச்சத்தையும் நடுக்கத்தையும் மக்களுக்கு விளைவித்து அமங்கலமாகியது ஏன் என்று இப்பொழுது நாம் செவ்விதிலறிந்து கொள்ளலாம்.

மேற்கூறியவற்றிற் கிசைந்திருக்கும் மற்றோருண்மையையுங் காணுதல் நலம். நரகம் நானிலத்திற்குக் கீழாயின், சுவர்க்கம் மோட்சமாகியவை உயரவிருக்க வேண்டுமன்றோ? அங்ஙனமாயின், தெற்கிற்கு எதிராகிய வடக்கில் சுவர்க்

கமும் மோட்சமும் அமைதல் ஒக்கும். இதனு லேயே கைலாயமும் வைகுண்டமும் வடக்குள வென்று சொல்லலாம்.

"தென்னுட்டவரும் சுவர்க்கம் புகுதலான்...வடதிசையும்
கொன்னுளர் சாலப் பலர்"

என்று **நாலடியா**ரில் நாம் முன்கண்ட சொற்ருெடர்களின் பொருள் ஈண்டு நாம் கண்டவற்ருல் ஒருவாறு தெளிவடைகின்றது.

இதுவரையில் நாம் சொல்லியவாற்ருல் பூமியை ஒரு மகனுக அல்லது ஒரு மகளாக எண்ணிடின், தலேப்பக்கம் வடக்கு, காற்பக்கம் தெற்காகுமென்று நாம் முன்கூறியதற்கு மற்ருெரு பொருள் இவ்வாறு நினைப்பதால் தோன்றுவதறிக. வடக்கென்று பொருள்படும் 'உத்தரம்' என்ற சமஸ்கிருத மொழியை ஆராய்வோமாயின், அது 'மேல்' என்று அர்த்தங்கொள்ளும் 'த்ரு' எனும் பகுதியிலிருந்து பிறப்பதென்று தெரிகிறது. 'உத்தரோஷ்ட' அல்லது 'உத்தரெளஷ்ட' என்பது 'மேலுதடு' என்று பொருள்படுவது காண்க. 'உத்தரகாய' என்பது உடம்பின் மேற்பாகமாகும். இவற்றையெல்லாம் பார்க்கின் வடதிசையை மேல்திசை என்று முன்னேர் நினைத்தது திண்ணமாகின்றது.

## ௬. வையகத்தின் வடபாதியுந் தென்பாதியும்

பூகோளசாஸ்திரமென்று வழங்கும் நில நூலில் வையகத்தை மேற்பாதி, கீழ்ப்பாதி (குடகோளார்த்தம், குணகோளார்த்தம்) என்று பிரிப்பதுண்டு; வடபாதி, தென்பாதி என்று பெரும்பாலும் பிரிப்பதில்லை. மேற் பாதி, கீழ்ப்பாதி என்று பகுப்பதைவிட, வட பாதி தென்பாதி என்று வகுப்பது எளிது. ஏனெனின், மேற்குங் கிழக்குமாக வையகத் தைப் பிரிக்கக்கூடிய, இயற்கையான வரம் பொன்றுமில்லை. தெற்கையும் வடக்கையும் பிரிப்பதற்கோ அத்தகைய வரம்பு ஒன் றுண்டு. இவ்வரம்பு எஃதெனின், நிலத்தின் நடுக்கோடாகும்.[1] ஞாயிற்றின் கதிர்கள் எப் பாலுஞ் சாயாது நேரேவந்துபடும் இடம் ஏனைய இடங்களைக் காட்டினும் வெப்பமுடையதா யிருக்கவேண்டுமாதலால், நடுக்கோடு செல்லு மிடமெல்லாம் வெம்மை மிக்க நாடுகளாகின் றன. இக்கோட்டிலிருந்து வடக்குந் தெற்கும் அகன்று செல்லச்செல்ல, வெப்பமு மொளியும் ஒருங்கே குறைகின்றன. ஆதலின், நடுக் கோடென்பது ஓர் இயற்கை வரம்பாகும்.


இந்த நடுக்கோட்டை வைத்துக்கொண்டு உலகத்தை வடபாதியாகவுந் தென்பாதியாக

---

1. The Equator

வும் வகுத்துப் பார்ப்போமாயின், நிலப்பரப்பின் பெரும்பாகம் வடபாதியிலும், நீர்ப்பரப்பிற் பெரும்பாகந் தென்பாதியிலு முளவெனக் காணலெளிது. இது குறித்து வடபாதியை

நில உருண்டை



தென்பாதி வடபாதி

நிலப்பகுதி என்றும் தென்பாதியை நீர்ப் பகுதி என்றும் **பூகோள நூல்** கூறுகின்றது. உலகத்து நீர்ப்பரப்பையும் நிலப்பரப்பையும் ஒப்பிடுவோமாயின் முன்னையது ஏறக்குறைய முக்காற்பங்கும், பின்னையது காற்பங்குமாகும். உலகத்தின் இக்காற்பங்கு நிலத்தில் முக்காற் பங்கு வடக்கிலும், காற்பங்கு தெற்கிலுமுள் ளனவெனலாம். மக்களுடைய வாழ்க்கைக்கு இன்றியமையாததாகிய நிலம் பெரும்பாலும் வடக்கிலுளதென்பது வடக்கின் உயர்விற் கொரு காரணமாகாதோ? நிலப்பரப்பு எவ்

வளவு விரிந்ததாயினும் அதுகண்டு மக்கள் அஞ்சார். புரண்டுவரும் அலைகளும் கொந்தளிப்புமுள்ள கடற்பரப்பைக் கண்டு இந்நாளிலும் மக்கள் அஞ்சுகின்றனர்.

நமதுடலில் முக்காற்பங்கு நீர் என்று அறிஞர் கூறுவர். இவ்வகையில் உடல் உலகத்தை யொத்திருக்கின்றதென்பது அறியற்பாலது. முதன் முதல் உலகத்துத் தோன்றிய உயிர்த்தொகுதி கடல்நீரிலிருந்த தென்றும், அது கடற்கரையை யடைந்து வாழத் தொடங்கி, நீரிலிருந்து தனக்கு வேண்டிய காற்றை யுட்கொள்ளும் வழக்கத்தைச் சிறிது சிறிதா யொழித்து, நிலத்தில் வந்து நேரே காற்றை யுட்கொள்ளத்தக்க அகக்கருவிகள் பெற்றதென்றும் உயிர்நூல்வல்லார்[1] சொல்கின்றனர். இந்நிலையிலிருந்து படிப்படியாய் உயிர் வளர்ந்து, நிலத்தில் வாழ்ந்து பல் விலங்குகளாய்ப் பெருகி, இறுதியில் மக்களுருவத்தைப் பெற்றதென்பது ஒரு கொள்கை.[2]

இக்கொள்கை மச்ச, கூர்ம, வராக, நரசிம்ம அவதாரங்களால் குறிப்பா யுணர்த்தப்படுவது காணத்தக்கது. மச்சமென்பது நீரிலேயே வாழ்வது. கூர்மமென்ற ஆமை நீரிலும்

1. Biologists 2. Evolution

நிலத்திலுமுளது. நீரில் வாழ்வதாயினும் அது நிலத்தில்தான் முட்டையிடும். வராகமென்ற பன்றி நிலத்தில் வாழ்வதாயினும் நீர்த்தொடர் புடையது. நரசிம்மமென்பது பாதி விலங்கு பாதி மக்கட்டன்மையுடையது. இம்முறையில் உயிரின்வளர்ச்சி விளக்கப்படுகின்றது. மேலும், கருப்பையிலிருக்கும்பொழுது மக்கட் குழவியி னுருவம் முதலில் விலங்குகளின் கருப்பையி லுள்ள உருவத்தை யொத்திருந்து, பிறகுதான் மக்களுருவத்தைப் பெறுகின்றது. அன்றியும், மக்கள், விலங்கு, பறவை, மீன் ஆகிய எல்லா உயிர்களுங் கருப்பையில் அல்லது முட்டையில், முதலில் நீர்வடிவாயிருந்து பிறகு உருவங்கொள் கின்றன. உயிருக்குப் பிறப்பிடம் நீரே என்ற உண்மை இதனாலும் வலியுறுகின்றது. விவிலிய நூலில்[1] "உலகத் தொடக்கத்தில் இறைவனது ஆற்றல் தண்ணீர்களின் மேல் அசைவாடிக்கொண்டிருந்தது," என்று எழு தப்பட்டிருக்கின்றது. 'நாராயணன்,' என்ற கடவுட் பெயர் 'நீர்' என்ற பொருளுடைய, 'நாரம்', எனுஞ் சொல்லிலிருந்து வருவது. இவற்றையெல்லாம் பார்த்தால் உயிரின்தோற் றத்திற்கும் நீரிற்கும் நெருங்கியபொருத்த முண் டென்று தெரிகிறது.

---

1. The Bible

நீரிலிருந்து முதலில் உயிர் தோன்றிற்றெனின், அது நடுக்கோட்டுப் பகுதியிலுள்ள கடற் கரைகளிலேதான் தோன்றியிருக்க வேண்டும். ஏனெனின், அங்கேதான் உயிர்கள் தோன்றுவதற்கு மிகுதியும் வேண்டப்படுவதாகிய வெப்பமிருக்கின்றது. இயற்கையாய் உயிர்தோன்றி வளர்வதற்கேற்ற இடமிதுவே. வெப்பங்குறைந்த இடங்களில் உயிர்வகைகள் பெருகுவனவாயில்லை. மேல்வருகின்ற பகுதிகளில் இதுபற்றி விரித்துரைக்கப்படும். நிற்க, தென்பாதியாகிய நீர்ப்பரப்பினுல் வையகம் பெறும் நன்மைகள் சிலவற்றை இப்பொழுது பார்ப்போம்.

பெரும்பகுதி நீரும் சிறுபகுதி நிலமுங்கூடி உலகமாவது எண்ணி எண்ணி வியத்தற்குரியது. 'நீரின்றமையாதுலகு,' என்றூர் **வள்ளுவர்.** அவர் கூறியது மழையின் சிறப்பைப்பற்றி; ஆனுல் அதிற் பொதிந்துகிடக்கு முண்மை மிக மிகப்பெரியது. இரண்டுவகையில் அவ்வுண்மையைக் காட்டுவோம். **முதலாவது,** நீரைவிட நிலம் எளிதில் வெப்பம் பெறுந் தன்மையது. இதனுல், ஞாயிறு கடுங்கதிர் பரப்புவதால் நிலஞ் சுடுகின்ற வேளைகளில் நீர் குளிர்ந்திருக்கின்றது. நிலம் ஞாயிற்றினெளியால் கடிதில் வெப்பம்பெற்றுக் கடிதில் அதை இழந்துவிடுகிறது.

நீரோ விரைவில் சூடுபெறுவதில்லை, பெற்ற சூட்டை விரைவில் இழந்து விடுவதுமில்லை. இக்காரணத்தால் நிலஞ் சூடாயிருக்குமிடங்களில் கடலிலிருந்து குளிர்ந்த காற்றும், பூமி குளிர்ந்திருக்கு மிடங்களில் சமுத்திரத்திலிருந்து இளவெப்பங்கொண்ட காற்றும் வீசி மக்களுக்கு இனிமை யளிக்கின்றன. வையகம் வெப்பதட்ப மிகுதியால் பெரிதும் இடர்ப்படாது தடுப்பது தெற்கில் விரிந்துகிடக்கும் நீர்ப்பரப்பே. 'நீரின்றமையாதுலகு,' என்ற உண்மை இதில் வெளிப்படுகின்றது. இது தெற்கின் சிறப்பாகும். சிற்சிலவகையில் வடக்கைவிடத் தெற்குச் சிறப்புடையதென்ற கருத்துத் தென்றலைப்பற்றி நாம் பேசிய விடத்தில் எடுத்துக் காட்டப்பட்டது. **இரண்டாவது,** மிக விரிந்திருக்கின்ற நீர்ப்பரப்பிற் காய்கின்ற வெப்பம் கடலிலுள்ள நீரை ஆவியாக மாற்றி விண்ணில் ஏற்றுகிறதற்கு மக்களது முயற்சி வேண்டப்படுமாயின், எத்துணைக்கோடி குதிரையாற்றல்[1] அதற்கவசிய மென்று கணக்கிடலுமாவதோ? இவ்வளவு ஆற்றலும் எளிதிற் பரிதியினின்றும் பெறப்படுகின்றது. மழைபெய்து நிலத்தைக் குளிரச்செய்து மக்களுக்கு வேண்டிய உணவைப் படைத்துப் பேருதவி புரிகின்ற, 'ஞாயிறு போற்றுதும், ஞாயிறு

1. Horse Power

போற்றுதும்'.[1] ஞாயிற்றினொளியால் கடலிலுள்ள நீர் ஆவியாக மாறி மேகங்களாக விசும்பிற் சஞ்சரிக்கின்றது.

"காரென்றும் பேர்பெற்ருய் ககனத் துறும்போது
நீரென்றும் பேர்பெற்ருய் நெடுந்தரையில் வந்ததற்பின்"

ஆதலின், நீருங் காரும் ஒன்றே. விசும்பிலுள்ள காராகிய நீர் ஞாயிற்றின் வெப்பத்தை ஓரளவு தடுத்து இவ்வையக வாழ்க்கைக்குப் பெரிதும் பயன்படுகின்றதென்பது கற்ருேர் துணிபு. இதனுனும், 'நீரின்றமையாதுலகு' என்பதிலுள்ள உண்மை விளக்கமுறுகின்றது. தெற்கிற் பரவியிருக்கும் நீர்ப்பரப்பினுதவி பெரிது, பெரிது.

இந்நாட்டில் பண்டுதொட்டே வருகின்ற ஒரு கொள்கை, ஆகாயத்திலிருந்து காற்றும், காற்றிலிருந்து நெருப்பும், நெருப்பிலிருந்து நீரும், நீரிலிருந்து நிலமுந்தோன்றின வென்பது. நுண்ணியவற்றிலிருந்து திண்ணியவை தோன்றுமென்பது[2] இக்கொள்கையின் உட்கருதது. நிலம் மிகத் திண்ணிது. இதனேடொப்பிடுங்கால், புனல் நுண்ணிது. புனல், அனல் ஆகிய இவற்றை யொப்புநோக்குவோமாயின், புனல் திண்ணிது, அனல் நுண்ணிது.

---

1. சிலப்பதிகாரம்
2. The gross proceeds from the subtle

இங்ஙனமே, காற்று தீயைக்காட்டிலும், விசும்பு காற்றைக்காட்டிலும் நுண்ணியன. வேறொருமுறையி லிதைக் கூறவேண்டுமாயின், ஐம்பூதங்களில், சுவை, ஒளி, ஊறு, ஓசை, நாற்றம் என்ற ஐந்து பண்புகளையுடைய நிலம், நாற்றமொழிந்த நான்கு பண்புகளை யுடைய நீரிலிருந்து தோன்றும். ~~நான்குடைய நீர், சுவை நாற்றமென்ற இரண்டும் நீங்கிய மூன்று பண்புகளையுடைய நீரிலிருந்து தோன்றும்~~ நான்குடைய நீர், சுவை நாற்றமென்ற இரண்டும் நீங்கிய மூன்று பண்புடைய தீயிலிருந்து தோன்றும்; இவ்வாறே பிறவும். நுண்மை, திண்மை என்ற சொற்களுக்கு இவ்வகையிற் பொருள் கொள்க.

"கருவளர் வானத் திசையிற் றோன்றி
யுருவறி வாரா வொன்ற னூழியு
முந்துவளி கிளர்ந்த வூழூ ழூழியுஞ்
செந்தீச் சுடரிய வூழியும் பனியொடு
தண்பெய றலைஇய வூழியு மவையிற்
றுண்முறை வெள்ள மூழ்கியார் தருபு
மீண்டும் பீடுயர் பீண்டி யவற்றிற்கு
முள்ளீ டாகிய விருநிலத் தூழியு"

என்ற **பரிபாட**லடிகளில் நவிலப்பெற்றுளது. ஈண்டு, வானம் என்பது விசும்பு; வளி என்பது காற்று; செந்தீ என்பது நெருப்பு; பனி, பெயல்

என்பன நீர் அல்லது புனல், இருநிலம் என்பது பூமி. பரிபாடலுரையாசிரியராகிய **பரிமேலழகர்**, மேற்காட்டிய அடிகட்கு உரைகூறி, "பரம்பொருளினின்றும் ஆகாயந் தோன்றி, அதனினின்றும் காற்றுத் தோன்றி, அதனினின்றுந் தீத் தோன்றி, அதனினின்றும் நீர் தோன்றி, அதனினின்றும் நிலந் தோன்றிற்றென்று வேதத்துள்ளுங் கூறப்பட்டது" என்று வரைகின்றார்.

நுண்ணியவற்றி லிருந்து திண்ணியவை தோன்றுமாயின், தோன்றியவாறே அவை ஒடுங்கவும் வேண்டும். நீரிலிருந்து நிலந்தோன்றிற்றாயின், நிலம் நீரிலொடுங்கும்; இப்படியே நீர் நெருப்பிலொடுங்கும்; நெருப்பு காற்றிலும், காற்று விசும்பிலும் ஒடுங்கும். இவ்வாறு கருதுதல் சரியோ அன்றோ என்பது ஈண்டுக் கேள்வியன்று. இக்கருத்து இந்நாட்டிலுண்டென்பதே எடுத்துக்கொண்ட பொருட்குச் சாலும்.

நிலம் நீரால் அழிவுறுமென்ற கருத்து உலகம் பிரளயத்தால் மூடப்படுமென்ற புராணக் கூற்றிலுளது. நுண்ணிய நிலையிலுள்ள உலகத்தைத் தன்னுளடக்கிக்கொண்டு இறைவன்

நீரின்மேல் மிதக்கின்ருனென்று மக்கள் நினைக்கின்றனர். நீர் பெருகி இவ்வுலகத்தை யழிக்குமாயின், அது தெற்கிலிருந்து வருமென நாம் நினைக்கவேண்டும். நீர்ப்பரப்புத் தெற்கேயிருந்துளது. இம்முறையிலுந் தெற்கே அழிவுண்டென்ற கருத்துப் புகுத்தப்படுகின்றது. தெற்கினிழிவிற்கு மற்ருெரு காரணம் இதனைல் தோன்றுகின்றது.

---

## எ. தெற்கே கூம்பி வடக்கே விரியும் வையகம்

பெரும்பாலும் நீரும் சிறுபான்மை நிலமு முடையதாய் இஞ்ஞான்றுள்ள நமது வையகம் எப்பொழுதும் இப்படியே இருந்ததென்று சொல்லொணுது. கடல்களெல்லாம் இப்பொழு திருப்பனபோன்றே முன்னும் இருந்தனவென் றும், இப்பொழுதிருக்குமாறே நிலங்கள் மிகப் பழைய காலத்திலு மிருந்தனவென்றும் நினைப் பதற்கிடமில்லை. இந்நாளில் நிலமாயுளது முன் ளிற் கடலாகவும், கடலாயுளது நிலமாகவு மிருந்தன. வட இந்தியாவிலுள்ள **இமயமலைகள்** இப்போதிருக்குமிடத்திற் பண்டு பெரியகடல் பரவியிருந்தது. இந்தியாவில் குமரிமுனைக்குத் தெற்கே **இந்துமகா சமுத்திர**த்தில் மிக விரிந்து நீண்ட நிலமொன்றிருந்தது. அலைவீசிய இடம் மலையாயிற்று; மலைநின்ற இடம் அலைவீசுங் கடலாயிற்று. இஃதொரு கற்பனைக் கூற் றன்று; ஆராய்ச்சியாளர் பலருடைய திண்ணிய முடிபாகும்.

இமயமலை யொருகாலத்தில் கடற்குள் ளிருந்து வெளிவந்ததென்பதற்குப் போதிய சான்று அதன் முடிகளில் ஆங்காங்குக்

காணப்படும் எலும்புச் சட்டங்களே.[1] இவ் வெலும்புச் சட்டங்கள் கடலில் வாழ்கின்ற உயிர்வகைகளுடையவை. மிகமிக உயரமான மலையுச்சிகளில் கடல்வாழ் உயிர்களின் எலும்புச் சட்டங்கள் எங்கிருந்து வந்தன? பலப்பல ஆயிரமாண்டுகளுக்குமுன், **விந்திய மலை**க்கு வடக்கேயுள்ள நிலப்பகுதி கடலுக்குள்ளிருந்தது. அக்காலத்திலுண்டான பெரியதொரு வையக அதிர்ச்சியினலோ, வேறு காரணத்தாலோ கடலுக்குள்ளிருந்த நிலம் மேலேகிளம்பி **இமயமலை**யாயிற்று. "ஒரு காலத்தில் இமயமலை கடலுக்குள்ளிருந்து, சிறிது சிறிதாய் வெளிவரலாயிற்று. 'திமிங்கிலங்கள் ஓடுவதற்கிடமாயிருந்தது, கழுகுகள் வாழுமிடமாக மாறிற்று.' இஃதன்றி அத்லாந்திக் மகா சமுத்திரத்தின் நடுவில் ஒரு காலத்தில் மிக நீண்டு விரிந்த நிலப்பரப்பொன்றிருந்தது என்று சொல்லலாம்."[2] இமயமலையில் கடலில் வாழ்கின்ற உயிர்களின் எலும்புச்சட்டங்கள் காணப்படுவதற்குக் காரணம் இதனல் விளங்கும். கடலிருந்த விடத்தில் நிலந்தோன்றுமென்பதற்கு இமயமலை உதாரணமாகின்றது. நிலமிருந்த விடத்திற் கடலலை வீசலாமென்பதற்கு **அத்லாந்திக் மகா சமுத்திர**த்தின் நடுவில் ஒரு பெரிய

1. Skeletons 2. The Book of Knowledge

நிலப்பகுதி ஒருகாலத்தில் இருந்ததென்பது எடுத்துக்காட்டாகும்.

* "தக்கிண நில[1]மென்று சொல்லப்படுகிற தென்னிந்தியா, மண், கல் முதலியவற்றின் ஆராய்ச்சியில்[2] சிந்துகங்கைச் சமவெளி இமயமலை ஆகியவற்றினின்றும் வேறுபட்டு நிற்கின்றது. இப்பொழுது இந்துமகா சமுத்திரமுள்ள இடத்தில், ஆப்பிரிக்காவோடு இணைக்கப்பட்டிருந்த ஒரு பெரு நிலப்பரப்பின் பகுதியாகும் இது(தென்னிந்தியா). தென்னிந்தியாவிலுள்ள பாறைகள் உலகின் மிகத் தொன்மையான காலத்தே உண்டாயவை. இவை எக்காலத்திலாவது நீரிற் கிடந்தன வென்று சொல்வதற்கு அறிகுறியொன்றுமில்லை. பலவிடங்களில் இப்பாறைகள் நெருப்பிலிளகிய கருங்கற்பூச்சுடன் விளங்குகின்றன. ஆதலின், தென்னிந்தியா உலகந் தோன்றிய

* "Peninsular India or the Deccan (literally the Country of the South is geologically distinct from the Indo-Gangetic Plain and the Himalaya. It is the remains of a former continent which stretched continuously to Africa in a space now occupied by the Indian Ocean. The rocks of which it is formed are among the oldest in the world and show no traces of having ever been submerged. In many parts they are overlaid by a sheet of black 'trap' rock or basalt, which flowed over them as molten lava. In the Deccan we are therefore, in the first days of the world. We see land substantially as it existed before the beginning of life....

1. Deccan 2. Geologically

போதே யுண்டானது. உயிர்கள் வையகத்தில் தோன்றுவதற்குமுன் நிலம் எப்படி யிருந்த தென்பதை ஈண்டுக் காண்கின்றோம்.

"**சிந்துகங்கைச் சமவெளி** மேற்கே சிந்து நதியிலிருந்து இடையீடின்றிக் கிழக்கே கங்கையின் முகத்துவாரம் வரையில் ஆயிரத்திருநூறு மைல் பரவியிருக்கிறது. வையகம் இப்பொழுதுள்ள உருவத்தைப் பெறுமுன்னும், இமயமலை கிளம்புமுன்னும் இச் சமவெளி கடலால் மூடப்பட்டிருந்தது. இக்கடலின் தென்கரையில் தென்னிந்தியா இருந்தது. இமயமலை வெளிக்கிளம்பிய காலத்தில் இக்கடல் மறைந்தது. இமயமலையிலிருந்து பாய்கின்ற ஆறுகள், கடலிருந்த இடத்திலுள்ள பள்ளத்தை, மலையிலிருந்து கொண்டுவந்த மண்ணினால் நிரப்பின. இதனாலுண்டாகியதே சிந்துகங்கைச் சமவெளியாகும்."

---

"...The Indo-Gangetic plain stretches without a break from the Indus on the west to the Delta of the Ganges on the east, a distance of twelve hundred miles. When the world was still in the Himalaya, the space now occupied by this plain was a sea. The southern shore of this sea was what is peninsular India. With the rise of the Himalaya the sea dis-appeared and the rivers draining the Himalaya flowed into the depression bringing with them the silt which is now the soil of the plain."

—**Sir. T. W. Holderness, G. C. B.**
("Peoples and Problems of India.")

இதுகாறும் நாம் பார்த்தவற்ருல், இந்தியாவில் ஒரு காலத்தில் வடதிசை தாழ்ந்து தென்திசை யுயர்ந்திருந்ததென்பதும், பிறகு வடதிசையில் கடலுக்குள்ளிருந்து இமயமலை வெளிவந்தபொழுதோ அல்லது அதற்கு முன்னே பின்னே, குமரிமுனைக்குத் தெற்கேயிருந்த நிலப்பரப்பொன்று கடலில் மூழ்கியதென்பதும் இனிது விளங்கும்.

மேற்காட்டியவெல்லாம் இக்காலத்துப் புலவர் செய்த ஆராய்ச்சிகளால் வெளிவந்தன. தொன்மையில் நிகழ்ந்த இச்செய்திகளைப்பற்றி இந்திய மக்களிடை வழங்கிவரும் வரலாறுகளில் யாதாயினுங் குறிப்புண்டோ என்று ஆராய்வோம். தமிழ்நூல்களில் தலைச்சங்கம், இடைச்சங்கம், கடைச்சங்கம் என்ற மூன்று சங்கங்களைப்பற்றிய செய்திகள் சொல்லப்படுகின்றன. இடைச்சங்க காலத்தில் செய்யப்பட்டதாகிய **தொல்காப்பிய** நூலின் பாயிரத்தில்,

"வடவேங்கடந் தென்குமரி
யாயிடைத்
தமிழ்கூறு நல்லுலகத்து"

என்ற அடிகளுக்கு உரையெழுதுங்கால் **நச்சினார்க்கினியர்,** "நிலங்கடந்த நெடுமுடி யண்ணலை நோக்கி, உலகந் தவஞ்செய்து வீடு பெற்ற மலையாதலானும், எல்லாரானும் அறியப்படுதலானும் வேங்கடத்தை எல்லையாகக்

கூறினர். குமரியும் தீர்த்தமாகலின், எல்லை யாகக் கூறினர். இவ்விரண்டினையுங் காலையே ஓதுவார்க்கு நல்வினையுண்டாமென்று இவற் றையே கூறினர். இவையிரண்டும் அகப்பாட் டெல்லையாயின. என்னை? குமரியாற்றின் தெற்கு நாற்பத்தொன்பது நாடு கடல் கொண்டதாகலின். கிழக்கும் மேற்குங் கட லெல்லையாக முடிதலின், வேறெல்லை கூறு ராயினர். வேங்கடமுங் குமரியும் யாண்டைய என்றால், வடவேங்கடந் தென்குமரி என வேண்டுதலின், அதனை விளங்கக் கூறினர்.'' என்று விளங்கக் கூறுகின்றார். இதில், மூலத்தி லுள்ள 'குமரி' என்ற சொல்லிற்குக் குமரி முனை என்று பொருள்கொள்ளாது, 'குமரி யாறு' என்று கொண்டதும், குமரியாற்றின் தெற்கு நாற்பத்தொன்பது நாடு கடல் கொண்டதென்பதுங் கருதற்குரியன.

இக்காலத்தில் இந்தியாவிற்குத் தென் னெல்லையாயுளது குமரிமுனை.[1] (குமரி என்ற சொல்[2] காமரின் என்று ஆங்கிலத்தில் மரு விற்று). **நச்சினார்க்கினியர்** தொல்காப்பியத் திற்குப் பொருளுரைத்த காலத்திலும் குமரி முனையே இந்தியாவிற்குத் தெற்கெல்லையா யிருந்தது. இற்றைக்கு ஏறக்குறைய ஆயிரத்

1. Cape Comorin 2. Comorin.

தெண்ணூறு ஆண்டுகட்கு முன்னும், தமிழ் நாட்டிற்குத் தெற்கெல்லை குமரிமுனையே. எங்ஙனமெனின், கி. பி. இரண்டாம் நூற்றாண்டு அல்லது அதற்குச் சிறிதுபின் **இளங்கோவடிகளாற்** செய்யப்பட்ட **சிலப்பதிகாரம்** எனும் நூலில், "நெடியோன் குன்றமுந் தொடியோள் பௌவமும்" என்று தமிழ்நாட்டு வடதென் எல்லைகள் வரையறுக்கப்பட்டன. இவ்வடியில் குமரியாறு குறிக்கப்படவில்லை. குமரிக்கடல் தென்னெல்லை என்று கூறப்பட்டது. இவ்வாறிருக்க, நச்சினார்க்கினியர், தொல்காப்பியப் பாயிரத்துக்கு உரை பகருங்கால், குமரி என்ற சொல்லிற்குக் குமரியாறு என்றே பொருள் கொள்கின்றார். இஃதெங்ஙனம் பொருந்துமெனின், நச்சினார்க்கினியர்க்கு முன்னிருந்த **இளம்பூரணர்**, **இறையனாரகப் பொருளுரையாசிரியர்** முதலியோரும், **புறநானூற்றுப்** புலவர் சிலரும், குமரியை ஓர் ஆறென்று கூறிப்போந்தனரால், இவரும் இடைச் சங்கத்துக்கு நூலாயிருந்த தொல்காப்பியம் இயற்றப்பட்ட காலத்துக் குமரி என்பது ஓர் ஆறாக இருந்திருக்க வேண்டுமென்று மொழிந்தாரென்க.

**அடியார்க்குநல்லார்** குமரிக்குத் தெற்கே ஒருகாலத் திருந்தொழிந்த நாற்பத்தொன்

பது நாடுகளின் பெயர்களையும் பின்வருமாறு எடுத்துரைக்கின்றார்:—

"அக்காலத்து, பஃறுளி என்னும் ஆற்றிற்கும் குமரி என்னும் ஆற்றிற்குமிடையே எழுநூற்றுக்காவதவாறும், இவற்றின் நீர் மலிவானென மலிந்த ஏழ் தெங்கநாடும், ஏழ் மதுரை நாடும், ஏழ் முன் பாலைநாடும் ஏழ் பின் பாலை நாடும், ஏழ் குன்றநாடும், ஏழ் குணகாரைநாடும், ஏழ் குறும்பனை நாடுமென்னும் இந்த நாற்பத்தொன்பது நாடும், குமரி, கொல்லம் முதலிய பன்மலை நாடுங், காடும் நதியும் பதியுந் தடநீர்க் குமரி வடபெருங் கோட்டின்காறும், கடல் கொண்டொழிதலால் குமரியாகிய பௌவ மென்றாரென் றுணர்க."

முன்னொரு காலத்தில் குமரிமுனைக்குத் தெற்கே **குமரியாறு** ஒன்று இருந்ததென்றும், அதற்குத் தெற்கே பலகாவதத்திற் கப்பால் **பஃறுளியாறு** என்று ஒன்றிருந்ததென்றும், இவ்விரண் டாறுகளுக்கும் இடையேயுள்ள நிலப்பகுதி கடலாற் கொள்ளப்பட்டதென்றும், இக்கடல்கோள் நிகழ்ந்த பின்னும் குமரியாறு எஞ்சிநின்றதென்றும், மேற்கண்டவற்றால் நாம் அறிகின்றோம். குமரி என்பது ஓர் ஆறாக இருந்ததென்பது பின்வரும் **புறநானூற்**றுச் செய்யுளாலும் வலியுறுகின்றது:

"அன்னச் சேவ லன்னச் சேவ
லாடுகொள் வென்றி யடுபோ ரண்ணல்
நாடுதலை யளிக்கு மொண்முகம் போலக்
கோடுகூடு மதிய முகிழ்நிலா விளங்கு
மையன் மாலையாங் கையறு பினையக்
குமரியம் பெருந்துறை யயிரை மாந்தி
வடமலைப் பெயர்குவை யாயி னிடையது
சோழநன் னாட்டுப் படினே கோழி
யுயர்நிலை மாடத்துக் குறும்பறை யசைஇ
வாயில் விடாது கோயில் புக்கெம்
பெருங்கோக் கிள்ளி கேட்க விரும்பிசி
ராந்தை யடியுறை யெனினே மாண்டநி
னின்புறு பேடை யணியத்த
னன்புறு நன்கல நல்குவ் னினக்கே."

—புறநானூறு

இது குமரியம் பெருந்துறை யயிரை மாந்தி வடமலைப் பெயரும் அன்னச் சேவலை விளித்துப் **பிசிராந்தையார்** என்னும் புலவர் பாடியது. இதில் குமரியம் பெருந்துறை தெற்கெல்லையாகவும், வடமலை வடவெல்லையாகவுங் கூறப்படுகின்றன. வடமலை என்பதை இமயமலை என்று பொருள் செய்கின்றார் புறநானூற்று உரையாசிரியர். இக்காலத்தில் தமிழ்நாட்டில் வடமலை என்பது வேங்கடத்தின் பெயராகும். நிற்க. 'குமரியம்பெருந்துறை' என்பது கடலைக் குறிக்குமோ? ஆற்றைக் குறிக்குமோ? என்ற கேள்வி ஈண்டு

எழுகின்றது. 'குமரியம் பெருந்துறை யயிரை மாந்தி' என்ற சொற்றொடர்க்குக் 'குமரியினது பெரியதுறைக்கண்ணே அயிரையை மேய்ந்து' என்பது பொருள். குமரியம் பெருந்துறை என்பது குமரி என்ற கடற்றுறையாகாதோ? அதை ஆற்றுத்துறையெனப் பொருள்செய்வ தேனோ? என்றால், அயிரை என்ற சிறுமீன் கடலிலிருப்பதன்று; அஃது ஆற்றுமீனே யாகும். ஆதலின், இச்செய்யு ளெழுதப்பட்ட காலத்தில் குமரி ஓர் ஆறாக இருந்ததென்று துணிதல் கூடும். இஃதன்றி, **முல்லைக்கலியுள்,**


*மலிதிரை யூர்ந்துதன் மண்கடல் வௌவலின்*
*மெலிவின்றி மேற்சென்று மேவார்நா டிடம்பட*
*புலியொடு வின்னீக்கிப் புகழ்பொறித்த கிளர்கெண்டை*
*வலியினான் வணக்கிய வாடாச்சீர்த் தென்னவன்*

என ஒரு பாண்டியன் புகழப்பட்டுள்ளான். இங்கும் பாண்டிய நாட்டினொருபகுதி கடலால் மூடப்பட்ட செய்தி நவிலப்பெறுகின்றது. இவற்றையெல்லாம் உற்றுநோக்கும்பொழுது, முன்னொருகாலத்தில் தெற்கே நீண்டு பரவி யிருந்த நாடொன்று கடலில் மூழ்கிற்றென்ற செய்தி தமிழ்நாட்டுமக்கள் அறியாததன்றென் பது ஐயமற நிறுவப்படுகின்றது.

பாரதநாட்டின் தென்பகுதியில் நடந்த கடல் கோளாகிய இப்பெருநிகழ்ச்சி அக்

காலத்து மக்களை எவ்வாறு வருத்தி நடுங்கச் செய்திருக்கு மென்பதை அளவிட்டறைதல் அமைவதோ? இத்தகைய கடல்கோள் இரண்டு மூன்று நிகழ்ந்தனவென்று புலவர் நினைக் கின்றனர். அற்றாயின், முதலிற் கடல்கோள் நடந்தபின், மக்கள் உள்ளத்திற்றோன்றிய நடுக்கமுந் திகைப்பும் ஆயிரமடங்கு பெருகி யிருக்க வேண்டும். தெற்கென்ற திசையை நினைத்தபோதே அவர்கள் உளமொடுங்கி யுடல்நடுங்கி யிருப்பர். தெற்கே தீங்கும், வடக்கே யுறுதியுமுண்டென்று நினைப்பதற்கு அக்காலமக்களுக்கு இதைக்காட்டிலும் வலி யுடையதொரு சான்றும் வேண்டுமோ? நீர் பெருகி வையகத்தை யழிக்குமென்ற அச்சத் திற்கும், தெற்கிலிருந்து அவ்வழிவு தோன்று மென்ற எண்ணத்திற்கும், இயமனே தென் றிசைக்கோனென்ற கொள்கைக்கும் மேற் குறித்தவை அடிகோலியிருக்கவேண்டும்.

இப் பகுதியின் முதலில், நிலமுங் கடலும் இப்பொழு துள்ளவாறு முன்னிருக்கவில்லை என்று கூறியதை நிலைநிறுத்தும்பொருட்டு இந்தியாவின் தெற்கே பரவியிருந்த நிலம் கட லாற் கொள்ளப்பட்டதைத் துணையாகக்காட்டி னோம். இந்திய நிலப்பரப்பின் வடிவந் தெற்கே கூம்பி வடக்கே விரிந்திருப்பதற்கு மேலே


ஆர்க்டிக் மாகடல்
கிரீன்லாந்து
அத்லாந்திக் மாகடல்
கானடா
பசிபிக் மாகடல்
சைபீரியா
ருஷ்யா
ஆசியா
இந்திய மாகடல்
ஐரோப்பா
ஆப்பிரிக்கா
அண்டார்க்டிக் மாகடல்

காட்டிய நிகழ்ச்சிகளே காரணமாகும். நிலம் தெற்கே கூம்பி வடக்கே **விரிந்**திருப்பதால், 'வடக்கே வாழ்வு, தெற்கே தாழ்வு' என்று முன்னோர் உள்ளியிருக்கலாம். ஆசியாக்கண்டத்தில் இந்தியா மட்டுமன்றி வேறு நிலப்பகுதிகளுந் தெற்குநோக்கிக் கடலுக்குட் செல்லும் பொழுது குறுகுவதை நாம் காணலாம். **ஆஸ்திரேலியா**[1] என்ற நிலப்பகுதியைப் பார்த்தாலோ நாம்கண்ட முடிபு அங்குப்பொருந்தவில்லைஎன ஒருவேளை தோன்றலாம். ஆனால், ஆஸ்திரேலியாவின் தென்பகுதியிலுள்ள **டாஸ்மேனியா**[2] என்ற தீவையும் (இஃது ஒருகாலத்தில் ஆஸ்திரேலியாவோடு இணைக்கப்பட் டிருந்திருத்தல் வேண்டும்) ஆஸ்திரேலியாவுடன் சேர்த்துப் பார்ப்போமாயின், தெற்கே கூம்பி வடக்கே விரிதல் என்ற உண்மையை ஈண்டுந் தெளிவாகக் காணலாம்.

ஐரோப்பாக்கண்டத்தில் **அத்லாந்திக் மகா சமுத்திரத்**திற்கும் **மத்தியதரைக் கட**லிற்கு மிடையேயுள்ள **இஸ்பானியா**[3] நாட்டின் வடிவம் தெற்கே குறுகுதலையும் வடக்கே பெருகுதலையும் நன்கெடுத்துக் காட்டுகிறது. **மத்திய தரைக் கட**லிலுள்ள ஐரோப்பாவைச் சேர்ந்த பிறநாடுகளிலும் இவ்வுண்மை விளங்குகின்

1. Australia 2. Tasmania 3. Spain

றது. ஆப்பிரிக்காக்கண்டம் முழுமையும் நாம் இங்குக் கூறுமுண்மைக்குச் சிறந்ததோர் எடுத்துக்காட்டாய்த் துலங்குகின்றது. இந்தியாவிற்குத் தெற்கேயிருந்த நிலப்பரப்புத் தென்னாப்பிரிக்காவோடு பொருந்தி யிருந்ததென்பர். ஆதலின், ஆப்பிரிக்காக் கண்டத்தின் தென்பாகமொடுங்கி, வடபாகம் விரிந்த வடிவம், மேற்கூறிய கடல்கோளுக்குப் பின்னேயுண்டா யிருத்தல்வேண்டும். ஆப்பிரிக்காவின் கிழக்குக் கடற்கரையை யொட்டியமட்டில் தெற்குச் சுருங்கியிருப்பதற்கு நாம் மேலே குறித்தது காரணமா யிருக்கலாம். மேற்குக் கடற்கரையை யொட்டியும் நிலம் தெற்கே சுருங்கியிருப்பதால் அதற்கு வேறு காரணம் இருந்திருக்கவேண்டும்.

தெற்கே சிறுத்து நிலம் வடக்கே விரிதலுக்குத் தென்னமெரிக்காவென்ற நிலப்பரப்பு எல்லாவற்றினுஞ் சிறந்த எடுத்துக் காட்டாகின்றது. இப்பாகம் அரசிலைபோல் அமைந்துளது. ஈண்டுக் கடல்கோள் நிகழ்ந்ததாக யாண்டுஞ் சொல்லப்படவில்லை. இப்பெரிய நிலப்பகுதியை நோக்குங்கால், இஃதேன் இங்ஙனம் அமைந்துளதென வினவ எல்லோருந் தூண்டப்படுவர். வடவமெரிக்காவிலுந் தென்னமெரிக்காவின் உருவமே விளங்குகின்றது.

வடவமெரிக்காவிற்கு வடகிழக்கேயுள்ள **கிரீன் லாந்து**[1] என்ற பாகத்திலும் தெற்கே கூம்புந் தன்மை காணப்படுகின்றது. இவையாவுந் தற்செயலாய் நிகழ்ந்தனவென்று சொல்லுவது பொருந்துமா? கடலின் அடிப்பாகத்தில் நிகழ்கின்ற நீரோட்டங்கள் தெற்கேயுள்ள நிலப்பகுதிகளை யறுத்து அவற்றைக் கூம்பச் செய்யுந்தன்மை யுடையனவா யிருக்கின்றன வென்று ஒருசாரார் கருதுகின்றனர். இஃதுண்மையாயின், தெற்கிலிருந்து அழிவு வருமென்பது உறுதியாகின்றது. வையக உருண்டை சுழன்றுசெல்லு முறைக்கு நிலப் பகுதிகள் தெற்கே கூம்பி வடக்கே விரிதல் முதன்மையாக வேண்டப்படும்போலும். இஃது எங்ஙனமாயினுந் தெற்கென்பது சுருக்கம், ஒடுக்கம், இழிவு, அழிவு ஆகிய கருத்துக்களோ டொன்றுபடுதலும், வடக்கென்பது விரிவு, பெருக்கம், உயர்வு, வாழ்வு என்பவற்றோ டொன்றுபடுதலும் இதுகாறும் நாம் கண்டவற்றால் எளிதிற் பெறப்படுவ தறிக.

உலகிலுள்ள பெரிய நாகரிகங்க ளெல்லாம் வையகத்தின் வடபாதியிலேயே பெரும்

1. Greenland

பாலும் வளர்ச்சி பெற்றன. சிறந்த மதக் கொள்கைகளும் ஆண்டே பிறந்தன. இன்றளவும் அறிவிலுங் கலைகளிலுஞ் செல்வத்திலுஞ் சிறந்த மக்கட்டொகுதிகள் வடபாதியிலேயேயுள்ளனவென்று சொல்வது குற்றமாகாது.

## அ. உத்தராயணம் தட்சிணயனம்

உத்தராயணம் தட்சிணயனம் என்ற சொற்றொடர்கள் முறையே செங்கதிர்ச் செல்வனின் வடதிசைச் செலவையுந் தென்திசைச் செலவையுங் குறிக்கும். கதிரவன் வடதிசை, தென்திசை செல்வதில்லை. ஆனால், வையக உருண்டை கதிரவனைச் சுற்றுங்கால் நேராய் நின்று இயங்காமல் சிலகாலம் ஒருபுறஞ் சாய்ந்தும், சிலகாலம் மற்றொருபுறஞ் சாய்ந்தும் செல்வதால், சூரியன் வடக்குந் தெற்குஞ் செல்வது போற் காணப்படுகிறது. முன்னுள்மக்கள், சூரியன் பூமியைச் சுற்றி வருகிறதென்று கருதினராதலின், நிலையாயுள்ள வையகத்திற்குச் சிறிது வடக்காகச் சிலகாலமும் தெற்காகச் சில காலமுஞ்சென்று ஞாயிறு சுழல்கின்றதென்று அவர்கள் நினைத்ததில் வியப்பொன்றுமில்லை. உத்தராயணமும் தட்சிணயனமும் ஒவ்வொன்று ஆறுதிங்கள் கொண்டது; தைத் திங்கள்முதல் ஆனிவரை உத்தராயணம்; ஆடி முதல் மார்கழிவரை தட்சிணயனம்; இரண்டுஞ் சேர்ந்து ஓராண்டாகும்.

மக்களுக்கு ஓராண்டு தேவர்களுக்கு ஒரு நாளாமென்பது நம்முடைய நாட்டினர்க்குள் வழங்கும் ஒரு புராணக்கொள்கை. இக்கொள்

கைப்படி உத்தராயணமாகிய ஆறுதிங்களும் தேவர்களுடைய ஒருநாளில் பகற்பொழுதிற் கீடாகும்; தட்சிணாயனமாகிய ஆறுதிங்களும் இரவுப்பொழுதாகும். பகற்பொழுது உழைப் பிற்கும் இராக்காலம் ஓய்விற்கும் உரியனவாத லால், ஆண்டின் பகற்பொழுதாகிய உத்தரா யண காலத்தில் தேவர்களுக்கு உழைப்பும், இரவுப்பொழுதாகிய தட்சிணாயனகாலத்தில் ஓய்வுமுண்டென்று நாம் நினைத்தல் அறிவிற்கு முரணாகமாட்டாது. இதற்கிசைய வைணவர் கள் தட்சிணாயனகால முடிவாகிய மார்கழித் திங்களில், 'திருப்பள்ளி எழுச்சி' பாடுகின்றார் கள். பள்ளி எழுச்சி என்பது துயில் நீக்கம். தட்சிணாயனமாகிய இருட்காலமுடிந்து, உத்த ராயணமாகிய பகற்காலந் தொடங்குமுன் இறைவன் அறிதுயில்நீங்கி எழுந்தருளவேண்டு மென்று அடியவர் வேண்டிக்கொள்கின்றனர். மேற்கூறிய உத்தராயணம், தட்சிணாயனம் ஆகிய இரண்டையும் பகல், இரவென்று கொள் ளுங்கால், ஒன்றில் ஒளிமிகும், மற்றொன்றில் இருள் மிகுமென்றுதான் நினைக்கவேண்டுமே யன்றி, ஒன்று முழுவதும் பகல், மற்றொன்று முழுவதும் இரவு என்று கருதுதல் ஒவ்வாது. நிலவின் ஒளிப்பகுதி, இருட்பகுதி (சுக்கில பக்கம், கிருஷ்ணபக்கம்) ஆகிய இரண்டுஞ்

சேர்ந்து ஒருதிங்கள் ஆகின்றது. இதைப் பொதுவாகப் பதினைந்துநாள் வெளிச்சம், பதினைந்துநாள் இருட்டு என்று சொல்கின்றோம். ஒளிப்பகுதியில் இருளுண்டு; இருட்பகுதியில் ஒளியுமுண்டு. ஒளிப்பகுதியில் வெளிச்சம் பெருகிக்கொண்டே வர, இருள் அதற்கேற்பக் குறைகின்றது. இங்ஙனமே, இருட்பகுதியில் இருள் பெருகிக்கொண்டே போக, ஒளி குறைகின்றது. ஒளியின் பெருக்கம், நிறைமதி நாளில் (பௌர்ணமி) முற்றுப்பெறுகின்றது. இருளின் பெருக்கம் புதுப்பிறைநாளில் (அமாவாசை) முற்றுப்பெறுகின்றது. இதுபோன்றே உத்தராயணத்தில் ஒளிபெருகி இருள்குறைய, தட்சிணாயனத்தில் இருள் பெருகி ஒளி குறைகின்றது. இக்கருத்தைக்கொண்டுதான் உத்தராயணகாலம் பகற்பொழுதென்றும், தட்சிணாயனகாலம் இரவுப் பொழுதென்றுங் கூறப்படுகின்றன.

உத்தராயணத்தில் பங்குனி முடிவுமுதல் ஆனிவரையிற் பகற்பொழுது முப்பது நாழிகையிலிருந்து முப்பத்தொன்றரை நாழிகை வரையில் நீளும்; இந்த அளவிற்கிணங்க இரவு சுருங்கும். தட்சிணாயனத்தில் ஆவணிமுதல் மார்கழிமுடிய இரவு முப்பதுநாழிகையிலிருந்து முப்பத்தொன்றரை நாழிகை வரையில் நீளும்;

இந்த அளவிற்கிணங்கப் பகல் சுருங்கும். இது கொண்டு உத்தராயணத்தைப் பகற்பொழு தென்றும், தட்சிணயனத்தை இரவுப்பொழு தென்றுங் கூறுங் காரணத்தை யறிக. நமது நாட்டில் பகற்பொழுது நீள்வதும் இரவுப் பொழுது நீள்வதுஞ் சிறிதளவேயாதலின், உத்தராயணத்துக்குந், தட்சிணயனத்திற்கு முள்ள வேற்றுமை ஏற்றவாறு புலப்படுவ தில்லை. பிற நாடுகளில் இது நன்ருக விளங்கு கின்றது.

காலை, நண்பகல், மாலை, இரவு என்ற நாளின் பகுதிகள் ஒன்றிற்கொன்று எத்துணை வேறுபாடுடையனவோ, அத்துணை வேறுபா டுடையனவாய் ஓர் ஆண்டின் பகுதிகளுமிருக் கின்றன. இது, மேல்நாடுகளென்று சொல்லப் படுகின்ற அமெரிக்க, ஐரோப்பிய நாடுகளில் மிகத் தெளிவாய்த் தெரிகின்றது. அங்கே இளவேனில், முதுவேனில், இலையுதிர்காலம், குளிர்காலம் எனப் பருவங்கள் நான்காக வகுக் கப்படுகின்றன. இவற்றுள் இளவேனிற் காலத்தில் தரையை மூடிக்கிடக்கின்ற உறை பனி கரைந்து நீங்க, பசும்புல் தலைகாட்டத் தொடங்கி, மரங்கள் தளிர்விட்டு அரும்பெடுக்க, பறவைகளின் இனியபாடல்களெங்குங்கேட்க, இயற்கையெனும் நங்கைமணக்கோலங்கொண்

டவள்போல் வனப்புடன் மிளிர்கின்ருள். இப் பருவத்திற்கு முந்திய குளிர்காலத்தில் பெரிதும் மறைந்திருந்த கதிரவன் இக்காலே வெளிப் பட்டு, இளவெயில் பரப்பி இனிய வெப்பமளிக் கின்ருன். குருவிகளின் இன்னிசையும், இள வெயிலின் அழகும், நீனிறவானப் புதுமையும், பாரின் பசுமையும், காலே நேரத்தின் செப்பரிய ஊக்கத்தையும் உணர்ச்சியையும் புதுமையை யும் தூய்மையையும் மக்களுக்கு ஊட்டுகின்றன. இதற்கடுத்த காலமாகிய முதுவேனிலில், வெப் பமும் வெளிச்சமும் முன்னினும் பெருகி, மரங் களில் மலர்களுங் காய்களுந் தோன்றி, பயிர் கள் செழித்தோங்கி, கதிரவன் ஆட்சி உயர்ந்து, பகற்பொழுது மிகநீண்டு, வியர்வையொடு மக் கள் நிழல்தேடியோடும் நிலேமை ஏற்படுகின் றது. இது நண்பகலின் பண்பன்ரே? இதற் குப்பின் வரும் இலேயுதிர் காலத்தில் அதன் பெயர்க்கிணங்க மரங்களிலுள்ள இலேகளுதிர் ந்து விழுந்து, காய்கள் முற்றிக் கனியாகி, பயிர் கள் முதிர்ந்து கதிரீன்று, ஒளியும்வெப்பமுஞ் சிறிதுசிறிதாய் ஒருங்கே குறைந்து, மாலேப் பொழுதின் தன்மைகள் தோன்றுகின்றன. இறுதிப்பருவமாகிய குளிர்காலத்தில், வெயி லும் வெப்பமும் மிகமிகச் சுருங்கி, இரவுப்பொ ழுது மிகநீண்டு, பகலிலும் பார்வை யூடுருவிச்

செல்வதற்கரிய மூடுபனிமிகுந்து, உறைபனி வந்து தரையை மூட, பறவைகள் வேறிடஞ் செல்ல, மரங்கள் இலையின்றி வெறுங்கொம்பு களுடன் உயிரற்றவைபோல் நிற்க, வெளி யிலே செய்யும் வேலைகளடங்கி, மக்கள் முயற்சி குன்றிப் பெரும்பாலும் வீட்டிற்குள்ளேயிருந்து பொழுதைப் போக்குகின்றனர். இக்காலம் இரவுப்பொழுதை யொத்ததென்பது இனிது விளங்கும். இதுகொண்டு ஒரு நாளிற்குரிய வாகக் காட்டப்பட்ட பகுதிகளின் மிகைப் பெருக்கமே ஓராண்டிற்குரிய பகுதிகளாகும் என்ற உண்மை எளிதில் உய்த்துணரப்படும்.

ஐரோப்பிய, அமெரிக்க நாடுகளிற் பரு வங்கள் மேற்காட்டிய தன்மையவா யமைந் திருத்தலால் இளவேனில்,[1] முதுவேனில்,[2] இலையுதிர்காலம்,[3] குளிர்காலம்[4] என்பவை முறையே பிள்ளைப்பருவம், காளைப்பருவம், தளர்ச்சிப்பருவம், முதுமைப்பருவம் என்ப வற்றிற்கு உவமையாகின்றன. இளவேனிற் காலத்தில் இயற்கை புத்துயிர்பெற்று வளர் கின்றது. குளிர்காலத்தில் வெப்பமின்மையால் மரஞ்செடி கொடி புல் முதலிய உயிர்வகைகள் உயிரற்றவைபோலாகின்றன. வெளிகளில்

1. Spring 2. Summer 3. Autumn 4. Winter

வாழுஞ் சில உயிர்கள் இயக்கமொடுங்கித்[1] தூக்கத்தி லாழ்கின்றன. இளவேனிற்காலம் உத்தராயணத்தையும், குளிர்காலம் தட்சிணையனத்தையும் சார்ந்தவையாகையால், நாம் ஈண்டுக் காட்டப்போகு முண்மை இதில் முன்னுணரக் கிடக்கின்றது.

இதுகாறும் ஐரோப்பிய நாடுகளிலுள்ள பருவங்களைப்பற்றிப் பேசியவெல்லாம் உத்தராயணத்திற்கும் தட்சிணையனத்திற்குமுள்ள வேற்றுமைகளை நன்கு வெளிக்கொணரும் பொருட்டே. நமது நாட்டிலும் இவ்வேற்றுமைகள் முன்னொரு காலத்தில் சாலத்தெளிவாய் விளங்கியிருக்கவேண்டும். ஏனெனின், இரு திங்கள் ஒரு பருவமாக, ஆண்டு ஆறு பகுதிகளாய் முற்காலத்திலேயே நமது நாட்டில் பிரிக்கப்பட்டிருக்கின்றது. இவை கார், கூதிர், முன்பனி, பின்பனி, இளவேனில், முதுவேனில் என்பவை. இவற்றிற்கு மாதங்கள் முறையே ஆடி, ஆவணி; புரட்டாசி, ஐப்பசி; கார்த்திகை, மார்கழி; தை, மாசி; பங்குனி, சித்திரை; வைகாசி, ஆனி. பங்குனி சித்திரையாகிய இளவேனிற் பருவத்தில் அரசு, ஆல், வேம்பு, புளி முதலிய மரங்கள் தளிர்விட்டுப் புத்துயிர் பெறுகின்றன. இதற்கு முந்தியதாகிய பின்

1. Hibernation

பனிக்காலத்தில் மா, புன்கு முதலியவை தளி ரெடுக்கின்றன. ஆகவே, நமது நாட்டிலும் உத்தராயணகாலத்தில் இயற்கையில் புத்துயிர் தோன்றுகின்றதென்பது முன்னோரறிந்ததே.

ஈராயிரம் அல்லது மூவாயிரமாண்டுகளுக்கு முன் நமது நாட்டில் மிகமிகப் பெரிய காடுகள் நாடெங்கும் பரவியிருந்தனவென்பது உறுதி. முன்னுளிருந்த முனிவர் தம்முடைய ஆராய்ச்சி களை அடர்ந்திருண்ட காடுகளில் அமர்ந்து நிகழ்த்தினர். காட்டில் வாழ்தலென்பது இராமாயணத்திலும் பாரதத்திலும் நாம் விழைவுகொள்ளத்தக்க வகையில் தீட்டப்பெற் றிருக்கிறது. மக்கள் தொகையிற் பெருகப் பெருகக் காடழித்து நாடாக்கும் முறை பெரி தும் பின்பற்றப்பட்டதனுல், காடு குறைந்து நாடு பெருகிற்று. இதனுல், இக்காலத்தில் துரைத்தனத்தார், காடுகள் மேலும் அழிவுறாது காக்கும் நிலைமை ஏற்பட்டிருக்கின்றது. காடுக ளெல்லாம் அழிந்துபோமாயின் மழை பெய் தல் குன்றிவிடுமாதலின், காடுகளைக் காப்பது மக்கள் வாழ்க்கைக்கு இன்றியமையாததா கின்றது. இதை யுளத்திற்கொண்டு ஈராயிரம் ஆண்டுகட்கு முன்னிருந்த நிலைமையைக் காண் போமாயின், முற்காலத்தில், காடுமிகுந்து நாடு குறைந்திருந்தபொழுது, மாரி ஏராளமாகப்

பெய்திருக்குமென்பது எளிதிற் பெறப்படும். மழைக்காலத்தின் தொடக்கந்தான் கார்கால மெனப்படுவது. இஃது ஆடிமாதத்தில் ஆரம்ப மாகின்றது. மழைக்குமுன் காற்று உரங் கொண்டு வீசுகின்றது. இதை ஆடிக்காற் றென்று இன்றளவுங் கூறுகின்றனர். முற் காலத்தில் ஆடிமாதக் காற்றும் மழையும் அஞ் சத்தக்க வகையில் தொடங்கி யிருக்கவேண் டும். விசும்பில் மேகங்கள் எழுந்து, திரண்டு, இருண்டு, குமுறி, இடித்து ஆரவாரித்திருக்க வேண்டும். இக்காலத்தில் மக்களுக்குண்டாகிய திகில் இப்பொழுதுஞ் சில பழக்கவழக்கங்களில் காணப்படுகிறது. இடியிடிக்குங் காலை "அர் ஜுனா! அர்ஜுனா! என்று தமிழ் மக்களிற் பலர் கூவுகின்றனர். ஆடிமாதத்தில் இன்றும் நற்கருமங்கள் தொடங்கார்; புதுமணம் புரிந்த மக்களை ஆடிமாதத்திற் பிரித்து வைக்கின் றனர். தட்சிணாயனத்தின் இன்னுமை இங்ங னம் நம்முடைய முன்னோர்க்கு நன்கு புலப் பட்டது.

ஆகாயமிருளக், காற்றுமோத, மின்னல் விளங்க, இடியோசை கேட்க, தட்சிணாயனந் தொடங்குகின்றது. சூரியன் தென்திசை செல்லத் துவங்குவது ஒளியிலிருந்து இருளுக் குட் செல்வதுபோ லிருக்கின்றது. ஆடித்

திங்கள் சென்று ஆவணித்திங்கள் வரப் பகலை விட இராப்பொழுது நீள்கிறது. இருள் நீள்வதற்கேற்பக் குளிரும் மிகுதிப்படுகின்றது. மழை பெய்வது மிகுந்து ஆறுகள் கரைகளை யுடைத்துக்கொண்டு புரண்டோடுகின்றன. குளிரும் மழையும் இருளும் முன்னினும் பெருகுகின்றன. வெள்ளம் புரண்டுவந்து பயிர்பச்சைகளை யழித்து வீடுகளையும் அடித்துக்கொண்டு போய் விடுமென்ற நினைவுதோன்றுவதற்கு இடமுண்டாகின்றது. பறவை விலங்குகளும் இரையகப் படாமல் தவிக்கின்றன. வீட்டிலிருந்து கொட்டாவிவிடும் மக்களுக்குக் குளிரினாலும் முயற்சியின்மையாலும் அயர்ச்சி தோன்றிக் காய்ச்சலு முண்டாகின்றது. காலையோ மாலையோ என்று பொழுதை வெளியே நோக்கி யறிதற்கில்லை. சூரியனது தென்திசைச் செலவு இன்னும் நின்றபாடில்லை. இங்ஙனம், காற்றும் மழையும் இருளுங் குளிரும் மிகுந்து முயற்சிகள் தடைப்பட்டு அச்சந்தரும் தட்சிணயனகாலம் உலகிற்கு அழிவுண்டாக்குங் காலமாகுமென்று தொல்லுலக மாந்தர் நினைத்தனரெனின், அது குறித்து நாம் எள்ளுவதும் நகுவதும் ஆங்கொல்?

ஆயிரத்தைந்நூறு யாண்டுகளுக்கு முன் கிறித்துமதம் ஐரோப்பாவில் பரவத்தொடங்

கியகாலே, ஆண்டுறைந்த பழங்குடிமக்கள் இருளும் குளிரும் மிகுந்து வெண்திரைகொண்டு நிலத்தை மூடியதுபோல் உறைபனி படிந்திருப்பச் செயலொடுங்கித் தாம்வாழும் தட்சிணுயன காலத்தின் இன்னுமையை நினைந்து வாடினர்; வாடி அக்கொடிய காலத்தின் முடிவு அணுகும் நாளைப் பேராவலுடன் எதிர்நோக்கிக் குடித்து வெறித்துக் களித்தனரென்று படிக்கின்றோம். கிறித்தவக் கொள்கைகளை அவர்களுக்குப் புகட்ட முயன்ற பெரியோர் இத்தீய வழக்கத்தை நிறுத்த எவ்வளவு முயன்றும் பயன்படாமையால், கிறித்து பிறந்தநாட் கொண்டாட்டத்தைத் தட்சிணுயனத்தின் முடிவோடு பொருந்துமாறு இசைத்தனரென்று ஐரோப்பியப் பழமையாராய்ச்சிக்காரர் வாயிலாய் நாமறிகின்றோம். உண்மையில் கிறித்து பிறந்த நாள் டிசம்பர் இருபத்தைந்தன்று; அதற்கு மிகவும் பிற்பட்டது. பாரதப் போரில் காயமடைந்த பீஷ்மர் தட்சிணுயனத்தில் உயிர் துறக்க விரும்பாராய் உத்தராயண காலம் வரும் வரையில் காத்துக் கொண்டிருந்தனரென்று பார்க்கிறோம். என்னே தட்சிணுயனத்தின் கொடுமை!

பூமியின் நடுக்கோட்டிலிருந்து வடக்கேயாயினும் தெற்கேயாயினும் அகன்று போகப்

போக, உயிர்வகைகளின் தொகையும் வகையுங் குறைகின்றன. நடுக்கோட்டுப் பகுதியில், மக்கள், விலங்கு, பறவை, மரஞ்செடி கொடிகள் வகையிலுந் தொகையிலும் பெருகியிருக்குமாறு குளிர்நாடுகளில் இல்லை. கடல்வாழ் உயிர்களிலும் இவ்வுண்மையையே காண்கின்றோம். உறைபனிக் காடாய் விரிந்து கிடக்கின்ற வடதுருவத்திலுந் தென்துருவத்திலும் கைவிட்டெண்ணக்கூடிய சில உயிர்களே நீரிலும் நிலத்திலும் வாழ்கின்றன. மற்றும், வடதுருவத்தின் அண்மையி லுறைகின்ற எஸ்கிமோ[1] மக்கள் குறளுருவினராகவும் விரிவிலா அறிவினராகவுந் தோன்றுகின்றனர். இதனல், மிகுந்த குளிர் உயிரின் வளர்ச்சிக்கேற்றதன் றென்பது நிறுவப்படுகின்றது.

இருள் நீள்வது தட்சிணயனத்தில் நிகழ்கின்றதென்று முன்கண்டோம். இந்த நீட்டம் நடுக்கோட்டிலிருந்து அகல அகலப் பெருகிக்கொண்டே செல்கின்றது. தட்சிணயனம் வளர வளர இரவு நீண்டு கொண்டே செல்கின்றது. வடதுருவத்தை அணுகுவோமாயின், இவ்விருள் இடையீடின்றி ஆறுதிங்கள் நீளமுள்ளதாகின்றது. ஆதலின், வடதுருவத்தின் உத்தராயணகாலமாவது ஆறுதிங்கள் ஒரே நீள

1. Eskimo

மூள்ள இரவு. தேவர்களுக்கு ஓராண்டு ஒரு நாள்; அதில் உத்தராயண காலம் பகற்பொழுது; தட்சிணாயன காலம் இரவுப்பொழுதென்ற கொள்கை வடதுருவத்தில் உண்மையாகின்றது. தென்துருவத்திலும் இஃது இங்ஙனமேயாகும்.

கதிரவன் தெற்கே செல்லச்செல்லக் காற்றும், குளிரும், இருளும் மிகுவதைக் கண்ட பண்டைமக்கள், 'பரிதி தெற்கேகுவதாலன்றோ இம்மாறுதல்கள் தோன்றுகின்றன; இது வரம்புகடந்து தெற்கே சென்றிடின், இவ்விருநீர் வியனுலகம் இருள்வாய்ப்பட் டொழியாதோ?' என்று தம்மைத் தாம் வினவியிருப்பர். இங்ஙனமே, கதிரவன் வடதிசை செல்லச்செல்ல ஒளியும் வெப்பமும் மிகுவதைக் கண்ட அவர்கள், 'ஞாயிறு வடதிசை போவதாலன்றோ ஒளி பெருகிப் பயிர் விளைந்து இந்த ஞாலம் இன்பமெய்துகின்றது,' என்று நினைந்திருப்பர். இதுபற்றியே, பகலவன் தென்திசை செல்வதை நிறுத்தி வடதிசை செல்லத் தொடங்குங்காலம், எல்லா மக்களாலுந் தொன்றுதொட்டே பெரிதும் போற்றிக் கொண்டாடப்பட்டு வருகிறது. "உத்தராயண **புண்ணிய காலம்**" என்றே வைதிகர்கள் இதனை யழைப்பர். தமிழ் நாட்டிலும் உத்தராயணத் தொடக்க

நாள் எல்லோராலும் பெருவிழா நாளாகக் கொண்டாடப்படுகிறது. ஆடிமுதல் மார்கழி ஈருக, அகத்தொடுங்கிக் கிடந்த மக்கள் தை பிறந்ததும் "ஓகோ! வழிபிறந்தது!" என்று பெருமகிழ்வுற்றுப் பெரும் **பொங்கற் புது நாள்** கொண்டாடி வருகின்றனர்!

இந்த நானிலத்துக்குவேண்டிய ஒளியைத் தந்து, வெப்பத்தைக்கொடுத்து, அழகிய நிறங்களைத் தோற்றுவித்து, எறும்புமுதல் எல்லா உயிர்க்கும் இனிமைசெய்து, நாடோறும் இவ் வையகத்தைப் புதுப்பிக்கின்ற கதிரவன் தெற்கேசெல்கையில் தன்னுடைய ஒளியையும் வெப்பத்தையும் இழப்பதாலும், வடக்கே செல்கையில் அவன் உரம்பெற்று விளங்கி ஞாலத்தை மகிழச்செய்வதாலும், தெற்கே அழிவும் வடக்கே வாழ்வு முண்டென்று பண்டைமக்கள் உறுதியாக நம்பினர். இருளுந் துன்பமும் நிறைந்த நரகந் தெற்கே யுள்ளது; ஒளியும் அந்தமிலின்பமும் உடைய மேலுலகம் வடக்கேயுளதென்று முன்னோர்கொண்டதற்கு வேறு சான்றும் வேண்டுங்கொல்! ஒளியின்றி உயிரில்லை, அறிவுமில்லை, அழகுமில்லை. இனியவை,நல்லவை என்று நாம் நினைப்பவை ஒளியோடு பொருந்தியே யிருக்கும். இறைவனை ஒளிவடிவினனுகக் கருதாதாரிலர். கதிரவன்

வடக்கே செல்லுங்கால் ஒளிபெருகுவதால், எல்லாவற்றையு மியக்கும் பேராற்றலாகிய கடவுள் அங்குளரெனக் கோடல் இயையு மன்றே. இதனால், மூவாமையுஞ் சாவாமையு முடையராய் இறைவனை இடைவிடாதுபோற்றி மகிழும் அடியவர்கள் கூடுமிடம் வடக்குளது. துருவன் போன்றார்க்கிடம் அஃதே. முற்றத் துறந்து முத்திபெற்றவ ராண்டுளர். வடக் குயர்ந்ததற்குக் காரண மிஃதொன்றே சாலாதோ?

முற்றிற்று.